**அரசின் நிதிக்கூற்றுக்கள் - 2023**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொது திறைசேரியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசின் நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களிலான/ மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அரசின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக்கூற்றுக்களுக்கு உரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஒக்டோபர் 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த 1.7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, இதனுடன் சமர்ப்பிக்கப்படும் அரசின் நிதிக்கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மூலதத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 விடயங்களை வலியுறுத்துதல்

நிதிக் கூற்றுக்களில் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கையில் நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் படிவம் மாற்றப்பட்டதன் கீழ் நியாயமான சமர்ப்பித்தலை விருத்தி செய்வதற்காக அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்கும் படிவம் மாற்றப்பட்டிருந்தமையும், நிதிசார் அறிக்கையின் தேவை மற்றும் நியதிச்சட்டரீதியிலான தேவைகள் மற்றும் பாதீட்டு செயலாற்றல் அறிக்கைக்காக புதிய அறிக்கையிடல் படிவம் தயாரிக்கப்பட்டிருந்தமையும், இணக்கக்கூற்றுக்கள் தேவையான சந்தர்ப்பங்களின் போது தயாரித்து வழங்கப்பட்டிருந்தமையும் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்களுக்குரிய முன்னைய ஆண்டின் ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் சமர்ப்பிக்கும் போது மீண்டும் காண்பிக்கப்படுகின்றமை அந்த பெறுமதிகளுக்கு மேலே காண்பிக்கப்படாதிருந்த போதிலும், உரித்தான வகையில் ஒப்பீட்டு ரீதியான தொகைகள் மீண்டும் காண்பிக்கப்படுகின்றமை நிதிக் கூற்றுக்களில் முக்கியமான கணக்கீட்டு கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்பட்டதுடன் விசேட கவனம் செலுத்தப்படுகின்றது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.7 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக அறிந்து கொள்வதற்காகவன்றி, உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.6 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) அறிக்கையின் 1.2 விடயத்தில் வலியுறுத்தப்பட்ட பந்தியின் தாக்கங்கங்களைத் தவிர நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பின்வரும் அவதானிப்புகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்திக்கான தொடர்பு | பரிந்துரைகள் |
|---|---|
| 1.7.1(உ) | நிதிக்கூற்றுக்கள் பயனர்களுக்கு சரியான தகவல்களை வெளிப்படுத்தும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்க வேண்டியிருந்தமை. |
| 1.7.1(எ) | கணக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையின் நிதிச் செயலாற்றல் கூற்றில் அறிமுகப்படுத்தப்பட்டமையால் கணக்கீட்டு மூல தத்துவங்களுக்கு இணங்க கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் கணக்கீடு செய்ய வேண்டி இருந்தமை. |

1.7.1(ஓ) கணக்கீட்டு மூலதத்துவங்களின் பிரகாரம் காசு பாய்ச்சல் கூற்று தயாரிக்க வேண்டி இருந்தமை.

1.7.1(கே) அரச கடன் பெறுவனவு மற்றும் கடன் சேவை கணக்கீடு செய்தல் முறையாக மேற்கொள்ள வேண்டி இருந்தமை.

1.7.1(கை) சகல கடன்களையும் கணக்கீடு செய்வதற்குரிய செலவினங்கள் சரியாக குறிப்பிட வேண்டி இருந்தமை.

1.7.1(கொ) கடன் கணக்கீடு செய்தல் கால எண்ணக்கருவிற்கு இணங்க மேற்கொள்ள வேண்டி இருந்தமை.

1.7.1(கீ) கடன் பெற்று கைப்பற்றப்படுகின்ற சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டி இருந்தமை.

1.7.1(சு) மறை கடன் பெறுமதி ஏற்பட்டதற்கான காரணம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு அந்த மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்தமை.

1.7.1(சை) தகவல்கள் சமர்ப்பிக்கும் போது ஒப்பீட்டு ரீதியில் பேணிச் செல்ல வேண்டி இருந்தமை.

1.7.1(சொ) கடன் பங்களிப்பு நிறுவனங்களுடன் கடன் மீதியை தொடர்ச்சியாக இணக்கம் செய்ய வேண்டி இருந்ததுடன் தேவையான சீராக்கங்களை உரிய பிரகாரம் விசாரணை செய்யப்பட்டதன் பின்னர் மேற்கொள்ள வேண்டி இருந்தமை மற்றும் அதன் பிரகாரம் வெளிப்படுத்துதல்.

1.7.1(ட) கடன் கணக்கீடு செய்தல் சரியான காலப்பகுதில் மேற்கொள்ள வேண்டி இருந்தமை.

1.7.1(டு) அரச உரிமை உள்ள நிறுவனங்களுடன் கால ரீதியில் மீதி உறுதிப்படுத்தல்களைப் பெற்று மதிப்பீட்டுக்கு உட்படுத்தி உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் மற்றும் கணக்குகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல்.

1.7.1(டெ) -மேற்படி-

1.7.1(டை) சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல், அமைச்சின் கீழ் வருகின்ற பல்வேறு திணைக்களங்களுக்கு இடையே சிறந்த தொடர்பினையும் இணைப்பினையும் மேற்கொள்ளவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதற்கு முரணாக செயற்படுகின்ற தரப்பினருக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டி இருந்தமை.

1.7.1(டொ) நிதிக் கூற்றுக்கள் பயனர்களுக்கு முக்கியம் வாய்ந்த தகவல்களை சரியான வகையில் வெளிப்படுத்த வேண்டி இருந்தமை.

1.7.1(டோ) -மேற்படி-

1.7.1(தா) -மேற்படி-

## 1.7 நிதிக்கூற்றுகள் தொடர்பான கருத்துரைகள்

### 1.7.1 அரசின் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பிலான கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்கீட்டு மூலதத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட உரிமை / தேறிய மூலதன மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள பொது நிதியத்தின் ஆரம்ப மீதியில் மீளாய்வாண்டின் மிகை அல்லது பற்றாக்குறை மற்றும் கடந்த கால ரீதியில் மேற்கொள்ளப்படுகின்ற ஏனைய சீராக்கங்கள் (Retrospective Adjustments) காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது தேறிய சொத்துக்கள் சீராக்கலின் முரண்கள் உள்ளடக்கப்பட்டு அதில் ஒன்றிணைந்த நிதியத்துடன் ஈடுசெய்ய வேண்டிய மீதியிலிருந்து அகற்றி உரிமை மூலதனம் / தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக நிதி செயலாற்றல் கூற்றில் சீராக்க வேண்டிய வெளிநாட்டு கடன் மீதி, வெளிநாட்டு நாணத்தில் உள்ள உள்நாட்டுக் கடன் நிலவைகள் மற்றும் உபகரண மீதிகள் உள்நாட்டு நாணயமாக மாற்றும் போது ஏற்பட்ட கூட்டுமொத்த தேறிய அந்நியச் செலாவணி இலாபமான ரூபா 1,572,718 மில்லியன் உரிமை மூலதனம் / தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அந்த அந்நிய செலாவணி முரண்களின் தேறிய இலாபம் நிதி செயலாற்றல் கூற்றில் சீராக்கப்பட்டிருக்குமாயின் மீளாய்வாண்டின் வருமான பற்றாக்குறை ரூபா 1,572,718 இனால் குறைத்துக் கொள்வதற்கு முடியுமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் இதனிடையே உரிமை மூலதனம் / தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று தயாரிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் போது நிதி மற்றும் நிதியல்லா சொத்துக்களில் மேற்கொள்ளப்பட்ட | பொது நிதியத்தின் மீதி திரண்ட நிதியத்தின் மீதியை உள்ளடக்கி இருந்ததுடன் தேறிய சொத்துக்கள் சீராக்கல் கணக்கின் மீதி என்ற இரண்டு மீதிகளினதும் கூட்டுத்தொகை ஆனமையால் மீளாய்வாண்டின் தேறிய சொத்துக்கள் சீராக்கல் கணக்கில் ஏற்பட்ட வேறுபாடுகளும் பொது நிதியத்தில் சீராக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு மூலதத்துவங்களின் அடிப்படையில் உரிமை மூலதனம் / தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சீராக்கம், கடன் நிலவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் மற்றும் பிழைகளைச் சரிசெய்தல் மறைமுகமாக உரிமை மூலதனம் / தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றில் சீராக்கப்பட்டதன் காரணமாக நிதிக் கூற்றுக்களை பயன்படுத்துபவர்களுக்கு அது தொடர்பான தெளிவாக புரிதலைப்பெற முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டின் நிதி நிலைமைக் கூற்றில் ஒன்றிணைந்த நிதிய மீதி நியதிச் சட்ட மற்றும் ஏனைய நிதியங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் நிதி அறிக்கையிடல் தேவை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் நியதிச் சட்ட மற்றும் ஏனைய நிதியத்தின் கீழ் பொது நிதியம் (General Fund) காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் படி 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட பொது நிதியத்தின் மீதியை அடிப்படையாகக் கொண்டு ஒன்றிணைந்த நிதியத்தின் மீதி காண்பிக்கப் பட்ட முறையில் நிதிக் கூற்றுக்கள் பரிசீலனை செய்யும் வசதிகள் இணக்கக்கூற்று தயாரித்து வசதிகளை வழங்கும் வகையில் இணைக்கக்கூற்றொன்று தயாரித்து சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | பொது நிதியத்தின் மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ள முறை நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 23 இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் அதில் குறிப்பிடப்பட்ட திரண்ட நிதியத்தின் ஆரம்ப மீதியில் மீளாய்வாண்டில் இடம் பெற்ற பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் சீராக்கப்பட்ட பின்னர் திரண்ட நிதியத்தின் ஆண்டின் மீதி பெறப்பட்டுள்ள முறை திரண்ட நிதியத்தில் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுக் கூற்றின் மூலம் தெளிவாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் பயனர்களுக்கு உரிய தகவல்களை தெளிவான விளக்கமொன்றுடன் சரியான முறையில் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | நிதி அறிக்கையிடல் குறிப்புக்களின் (Note to Readers) கீழ் மீளாய்வாண்டில் நிதி பற்றாக்குறை, நிதியீட்டம் செய்யப்பட்ட முறை நிதி செயலாற்றல் கூற்றில் வெளிப்படுத்தப்படுத்துமாறு காண்பிக்கப்பட்ட போதிலும் நிதி அறிக்கையிடல் தேவையின் அடிப்படையில் தயாரித்து மீளாய்வாண்டின் நிதி செயலாற்றல் கூற்றில் நிதி பற்றாக்குறை நிதியீட்டம் செய்யப்பட்ட முறை காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | பயனர்களுக்கு உரிய தகவல்களை வெளிப்படுத்தும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிதி செயலாற்றல் கூற்றில் உருவான ரூபா 2,172,190,285,821 பற்றாக்குறை, பாதீட்டு செயற்பாட்டு நிலைமை மற்றும் பற்றாக்குறை நிதியீட்டக் கூற்றில் மொத்த வருமானத்தின் தற்போதைய செலவினம் குறைக்கப்பட்டதன் பின்னர் உருவான ரூபா 1,650,857,019,989 நிலுவை ஒன்றுக்கொன்று வேறுபாடாக இருந்த போதிலும் வருமானப் பற்றாக்குறையாக அந்த பற்றாக்குறை இரண்டும் ஒரே பெயரில் பெயரிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிதி செயலாற்றல் கூற்று மற்றும் பாதீட்டு செயற்பாடுகள் மற்றும் பற்றாக்குறை நிதியேற்றக் கூற்றுக்கள் இணைப்பு 02 இற்காக தயாரிக்கப்படுகின்ற கூற்று 02 ஆக இருந்ததுடன் வருமான பற்றாக்குறை உரிய கூற்றில் இணைப்பின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ளது. | பரிசீலனையாளர்களுக்கு சிக்கல் இல்லாத வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (உ) | நிதிக் நிலைமைக் கூற்று தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத வகையில் வகைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. அதன் காரணமாக நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துபவர்களுக்கும் மற்றும் அது தொடர்பாக ஆர்வம் காண்பிக்கின்ற தரப்பினர்களுக்கும் எதிர்வரும் ஆண்டுகளின் போது அரசினால் செலுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டிய வெளிவாரி பொறுப்புக்களின் அளவு தொடர்பாக தெளிவான விளக்கத்தைப் பெறமுடியாதிருந்தது. | அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்படாது இருந்ததுடன் அதன் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நடைமுறை மற்றம் நடைமுறையல்லாததாக வகைப்படுத்தப்படவில்லை. | நிதிக் கூற்றுக்கள் பயனர்களுக்கு உரிய பிரகாரம் தகவல்களை வெளிப்படுத்துகின்ற வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் தேறுவதற்குரிய சொத்துக்களின் கிரயம் ஏடுகளில் இருந்து அகற்றாமல் தேறியதில் கிடைத்த கிடைத்த ரூபா 515,895,718 பெறுமதி கணக்கீட்டு மூலதத்துவங்களுக்கு முரணாக வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிதியல்லாச் சொத்துக்கள் விற்பனை மற்றும் உரிய விற்பனைப் பெறுமதியை கணக்கீடு செய்தல் தொடர்பாக தற்போது பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டுக் கூற்றில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | கணக்கீட்டின் அடிப்படை நிதி செயலாற்றல் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையால் கணக்கீட்டு மூல தத்துவங்களுக்கு இணங்க கொடுக்கல் வாங்கல் மற்றும் சம்பவங்கள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | அரசின் நிதிக்கூற்றினுள் காணிகள், புத்துருவாகும் பணிகள் நீங்கலாக ரூபா 882,576 மில்லியன் கூட்டுப் பெறுமதியுடைய நிதியல்லாத சொத்துக்களுக்காக அந்த சொத்துக்களின் பெறுமானத் தேய்விடக்கூடிய பெறுமதி அதன் பயன்படு ஆயுட்காலம் முழுவதும் கிரமமான முறையில் ஒதுக்கீடு செய்து விவேகமான கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் கழிக்கப்பட்டு ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. அதற்கமைய இந்த சொத்துக்களின் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட அழிவுநட்டம் காணப்படின் அது கழிக்கப்பட்ட பின்னர் கிடைக்கும் கொண்டுசெல்லும் பெறுமதி (Carrying amount) தொடர்பில் அரசின் நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துவோருக்கு திட்டவட்டமான அறிவினை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் மேற்படி நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்படாது இருந்ததுடன் அதன் பிரகாரம் சொத்துக்களுக்கு உரிய பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்படவில்லை . | |
| (ஏ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் நிதி அல்லாச் சொத்துக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 2,093,287,997,716 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குரிய 2023 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 2,017,866,940,344 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதியல்லாச் சொத்துக்களின் முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ள மீதிக்கும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிக்கும் இடையே ரூபா 75,421,057,372 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நிதியல்லாச் சொத்துக்கள் உரிய பிரகாரம் கணக்கீடு செய்தல் பொறுப்பு ஒவ்வொரு அறிக்கையிடல் நிறுவனங்களினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு உரிய பொறுப்பாக இருந்ததுடன் அவ்வாறு ஒவ்வொரு நிறுவனங்களினதும் அறிக்கையிடப்படுகின்ற சொத்து மீதிகளின் கூட்டுமொத்தம் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றது . 2023 ஆம் ஆண்டிற்காக நிதியல்லாச் சொத்துக்களை அறிக்கை | நிதிக் கூற்றுக்களின் கூறுகள் உரிய பிரகாரம் இனங்காண்பதற்கும் மற்றும் உறுப்படுத்துவதற்கும் வசதியாக மாத்திரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இடுவதற்காக அரச கணக்குகள் திணைக்களத்தின் மூலம் தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் சொத்துக்களை சரியாக அறிக்கையிடுவதற்காக 2024 பெப்ரவரி 05 ஆம் திகதி வரை போதியளவான காலம் வழங்கப்பட்டிருந்தது. | |
| (ஐ) | அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் காசுப்பாய்ச்சல் கூற்றில் பௌதீக சொத்துக்களின் கொள்வனவு அல்லது நிர்மாணம் மற்றும் ஏனைய முதலீடுகள் கைப்பெற்றல்களின் கீழ் ரூபா 385,393,946,314 பெறுமதி காண்பிக்கப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உரிய சொத்துக்கள் ரூபா 377,486,249,808 தொகையே உயர்வடைந்து காணப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 7,907,696,506 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | செலவின விடய இலக்கம் 2101 முதல் 2108 வரை நிதியல்லாச் சொத்துக்கள் கைப்பற்றல்களில் செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படுகின்ற மொத்த பெறுமதியும் நிதியல்லாச் சொத்துக்களின் தனிப்பட்ட மீதிகளின் கீழ் உள்ளடக்குதல் பொறுப்புக்களுக்குரிய அறிக்கையிடல் நிறுவனங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குரிய பொறுப்பாக இருந்ததுடன் அவ்வாறு அறிக்கையிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 13 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.<br><br>செலவின விடய இலக்கம் 2301 செலவின பங்களிப்பிற்குரியதாக ஏற்பட்ட வேறுபாட்டிற்கான காரணம், விளக்கமளித்தல் குறிப்புக்களில் ‘‘அரசாங்கத்துக்கு உரிய | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் ஏனைய கம்பனிகளுக்குரிய பங்கு உரிமை'' இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஒ) | மீளாய்வாண்டில் குத்தகை வாகனங்களுக்காக முதலீட்டு தவணைப் பணம் செலுத்தும் பெறுமதியான ரூபா 609,482,108 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றி நிதி செயற்பாடுகளின் கீழ் இடம்பெற்ற காசு சீராக்கமாக காண்பிக்க வேண்டிய போதிலும் அது முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் ஏற்பட்ட இலாபமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | குத்தகை முறையின் கீழ் சொத்துக்கள் கைப்பற்றும் போது உரிய பெறுமதி ஒரே தடவையில் செலுத்தப்படாது இருந்ததுடன் குத்தகை வாடகை தவணைக்குரிய மூலதன செலுத்துதல்களின் அளவு மாத்திரம் செலவின விடய இலக்கம் 2108 இன் கீழ் உள்ளக்கப்பட்டடுள்ளது. அதன் பிரகரம் உரிய பெறுமதி முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு மூல தத்துவங்களின் பிரகாரம் காசுப்பாய்யச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஓ) | அரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள காசுப்பாய்ச்சல்கூற்றின் நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலினுள் மானியங்களாக ரூபா 25,501,817,303 உள்ளடங்கியிருந்த போதிலும், அந்த பெறுமதியினுள் காசு உட்பாய்ச்சலொன்று அல்லாத ரூபா 11,208,048,717 பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் மானியங்களாக பெறுவனவுகள் உள்ளடங்கியிருந்தது. | பொருட்கள் மற்றும் உபகரணங்களில் மாணிப் பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு பாய்ச்சலாக குறிப்பிடப்பட்ட போதிலும் அதற்குரிய செலவினங்களும் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதியத்தின் வெளிப்பாய்ச்சலாக உள்ளடக்கப்பட்டமையால் இதன் மூலம் காசுப்பாய்ச்சல் கூற்றின் மீதி தாக்கம் ஏற்படவில்லை. | மேற்படி |
| (ஔ) | வெளிநாட்டு அந்நியச் செலாவணித் தொகையில் காணப்படுகின்ற நிதி ரீதியான சொத்துக்கள் (Monitory Assets) உள்நாட்டு பணமாக மாற்றும் போது ஏற்படுகின்ற | அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது தற்போது பயன்படுத்தப்படுகின்ற | கணக்கீட்டு அடிப்படையில் தயாரிக்கப்படுகின்ற நிதி செயலாற்றல் |

| | | | |
|---|---|---|---|
| | அந்நியச் செலாவணி மாற்றல் இலாபம் அல்லது நட்டம் கணக்கீட்டு மூல தத்துவங்களின் பிரகாரம் நிதிச் செலாற்றல் கூற்றில் சீராக்க வேண்டிய போதிலும் அவ்வாறு எழுந்திருந்த ரூபா 57,388,881,470 திரண்ட பெறுமதி அந்தந்த ஆண்டுகளின் போது நிதிச் செயலாற்றல் கூற்றில் சீராக்கப்படாமல் வெளிநாட்டுக் கடன் சுழற்சி நிதியத்தில் கணக்கீடு செய்யப்பட்டு நிதி நிலைமைக் கூற்றில் நிதியக் கணக்கொன்றாக தொடர்ச்சியாக சமர்ப்பித்தல் கணக்கீட்டு மூல தத்துவங்களுக்கு இணங்காதிருந்ததுடன் அது நியதிச் சட்ட அல்லது நியதிச்சட்டமல்லாத ஸ்தாபிக்கப்பட்ட நிதியமாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | முறைமையின் பிரகாரம் அந்நியச் செலாவணி மாற்றல் இலாபம் அல்லது நட்டம் நிதிச் செயலாற்றல் கூற்றில் சீராக்கப்பட்டிருக்க வில்லை. | கூற்றில் இந்த சீராக்கங்கள் மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (க) | 2022 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்படாதஇலங்கை மத்திய வங்கியின் இலாபத்தில் அரசாங்கத்திற்கு கையளிக்கப்பட்ட பெறுமதி ரூபா 1,028,542,891 பெறுமதி மீளாய்வாண்டின் போது கால எண்ணக்கருவிற்கு இணங்காத வகையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்படாத இலாப பங்கின் அளவு 2023 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட வருமானம் மதிப்பீட்டில் கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டு சரி செய்யப்பட்டுள்ளது. | அடிப்படை கணக்கீட்டு கொள்கைக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (கா) | வெளிநாட்டு கடன் உடன்படிக்கைகள் 39 இற்குரி உரிய அந்த உடன்படிக்கைகளில் பயன்படுத்தப்படாத கடன் மீதியின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட ரூபா 1,167,945,184 அர்ப்பணித்தல் கட்டணம் (commitment fee) ஆக மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதி நிதி செயலாற்றல் கூற்றில் நிதிக் கிரயத்தின் கீழ் காண்பிக்க வேண்டிய போதிலும் அது ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | கடன் உடன்படிக்கைகளுக்கு உரிய செலுத்தப்பட்ட கடப்பாட்டுக் கட்டணத்திற்காக ஏனைய தனிப்பட்ட செலவின விடய இலக்கம் ஒன்று ஒதுக்கப்படாது இருந்ததுடன் அவ்வாறு செலுத்தப்பட்ட பெறுமதி நானாவித சேவைகளுக்கான செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | செலவின வகைப்படுத்தல் சரியாக மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கி) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மத்திய அரசாங்கத்தின் அரச ஊழியர்களின் முற்பண (8493) மீதி ரூபா 30,720 மில்லியனாக இருந்த போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் அந்த மீதி ரூபா 30,516 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் ரூபா 204 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | சகல நிறுவனங்களினதும் வருடாந்த காலப் பகுப்பாய்வு அறிக்கை எங்களால் பரீட்சிக்கப்பட்டு தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கைகள் செய்யப்பட்டு உரிய நிறுவனங்களைத் தொடர்புபடுத்தி அந்த மீதிகளை சரியாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறியத்தருகின்றோம். செயலிழந்த அல்லது செயற்பாடற்ற மீதிகள் தொடர்பாக திணைக்களத்திற்கு உரியதாகக் காணப்படுகின்ற பழைய தகவல்களை பகுப்பாய்வு செய்து செயல் இழந்து காணப்பட்டமைக்கான காரணங்களை சரியாக இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மீதிகளைத் தீர்த்து வைப்பதற்காக விரைவாக நடவடிக்கைகளை எடுத்து காணப்படுகின்ற முறைமைகளை விருத்தி செய்தல் வேண்டும். |
| (கீ) | அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் மூலதனப் பங்களிப்பாக ரூபா 270,520,862,758 காண்பிக்கப்பட்ட போதிலும் நிதிக் கூற்று குறிப்பு இலக்கம் 15 இன் பிரகாரம் அது ரூபா 269,386,448,439 ஆனமையால் ரூபா 1,134,414,319 இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | அரசாங்கத்தின் மூலதன பங்களிப்பிற்கு உரிய நிறுவனங்களின் மீதிகளுடன் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கு) | உள்நாட்டு கடன் மீள் கட்டமைப்பின் கீழ் மீளாய்வாண்டின் போது அ.டொலர் 788,237,384 பெறுமதியான இலங்கை அபிவிருத்தி பிணைமுறியும் அரசாங்கத்தின் உள்நாட்டு சட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட அந்நியச் செலாவணி வங்கிகளுக்கு உரிய மக்கள் வங்கியில் இருந்து பெறப்பட்ட அ.டொலர் 85,943,611 கடன் தொகையும் ரூபா 3,204,461,897,219 ஆகக் காணப்பட்ட திறைசேரி பிணை முறியும் புதிய திறைசேரி பிணைமுறியாக மாற்றப்பட்டிருந்த துடன் இலங்கை மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,368,416,351,609 பெறுமதியான திறைசேரி உண்டியல் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 344,728,000,400 முற்பணத் தொகை, ரூபா 2,492,347,352,009 பெறுமதியான புதிய திறைசேரி பிணைமுறிக்கும், ரூபா 220,797,000,000 பெறுமதியான புதிய திறைசேரி உண்டியல்களுக்கும் மாற்றப்பட்டிருந்தது. இந்த மாற்றங்களின் போது எந்தவொரு நிதி சீராக்கமோ அல்லது வெளிப்பாய்ச்சல் இடம்பெறாத போதிலும் அந்த மாற்றத்தினால் நிதி உற்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சலாகக் கருதி காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஒரு கடன் பெறுவனவு மூலத்தை இன்னொரு கடன் பெறுவனவு மூலமாக மாற்றும் போது மூலதனப் பேரேட்டு கணக்கு ஊடாக அறிக்கையிடப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் இதன் போது காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல் ஒன்றுக்கு ஒன்று சீராக்கப்பட்ட பின்னர் காசுப்பாய்ச்சல் கூற்றில் இறுதி மீதியில் சீராக்கம் மேற்கொள்ளப்படுவது இல்லை. | கணக்கீட்டு மூலதத்துவங்களுக்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று அந்த அர்த்தத்தை தெளிவு படுத்தும் வகையில் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (கூ) | மீளாய்வாண்டில் இலங்கை மத்திய வங்கிற்கு செலுத்த வேண்டிய ரூபா 344,728,000,400 முற்பணம் திறைசேரி உண்டியல் அல்லது திறைசேரி பிணைமுறிகளாக மாற்றப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்த வேண்டிய முற்பணத் தொகை ரூபா 235,638,700,400 ஆனமையால் மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 109,089,300,000 முற்பணத் தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மத்திய வங்கி முற்பணங்களுக்கு உரிய தேறிய காசு வெளிப்பாய்ச்சல் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. (காசுப் பாய்ச்சல் கூற்று பிரதான பேரேட்டுக் கணக்குகளில் ஆண்டின் இறுதியில் மீதிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றது.) | கணக்கீட்டு மூலதத்துவங்களுக்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று அந்த அர்த்தத்தை தெளிவு படுத்தும் வகையில் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கெ) | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுடன் வருமான நிலுவை மற்றும் பாதீட்டு நிலுவைக்காக திட்ட கூற்றுக்கள், உள்நாட்டு நிதிமூலக் கூற்று மற்றும் ஒன்றிணைந்த நிதியத்தில் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு கூற்றுக்களுக்கான இணக்கக்கூற்றுக்களுக்காக இணக்கக் கூற்றுக்கள் இரண்டு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அந்த இணக்கக்கூற்றுக்கள் தயாரித்ததன் நோக்கம் வாசகர்களுக்கு வெளிப்படுத்தும் வகையில் உரிய இணக்கக் கூற்றுக் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கும் நோக்கம் கணக்கீட்டு கொள்கைக் கூற்றில் ‘‘நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் படிவத்தின் மாற்றங்கள்’’ இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | இணக்கக் கூற்றுக்களின் மூலம் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றவைகள் தொடர்பாக வாசகர்களுக்கு உரிய பிரகாரம் வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (கே) | வெளிநாட்டு அரச கடன் அறிக்கையினைப் பயன்படுத்துகின்ற கணனி முறைமையில் CSDRMS 854-1 அறிக்கை மற்றும் அரசாங்கத்தின் நிதி கூற்றுக்களை ஒப்பீடு செய்யும் போது இவ்வாறு கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன்களில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தப் பெறுமதி ரூபா 15,823 மில்லியன் ஆகும். மேலும் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் விளக்கமளித்தல் குறிப்பின் கீழ் (Explanatory Notes) குறிப்பு இலக்கம் 24(II) இன் மூலம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டு கடன்களின் மொத்தப் பெறுமதி ரூபா 17,103.2 மில்லியன் ஆக காண்பிக்கப்படடிருந்தது. இவ்வாறே மீளாய்வாண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலும் தேறாதிருந்த போதும் கணக்கீடு செய்யப்படாத கடன் பெறுமதி காணப்பட்டதன் காரணமாக 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் வெளிநாட்டு கடன் பெறுமதி ரூபா 15,823 மில்லியன் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன் பெறுமதி, மொத்த வெளிநாட்டு கடன் பெறுமதியில் 0.05 வீதம் மாத்திரமாக இருந்ததுடன் எதிர்பார்க்கப்படாத வெளிநாட்டுக் கடன் தொடர்பாக உரிய அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கு தொடர்ச்சியாக ஆலோசனை வழங்கி அவற்றைக் கணக்கீடு செய்வதற்கான வழங்கல்களை மேற்கொள்ளப்படும் என குறிப்பிடுகின்றோம். | அரசாங்கக் கடன் பெறுவனவு மற்றும் கடன் சேவைகள் கணக்கீடு செய்தலை முறையாக மேற்கொள்ளல் வேண்டும். |
| (கை) | அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கையின் கீழ் செலவினங்களை இனங்காண்பதற்குரிய கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் சகல செலவினங்கள், கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள கால எல்லையில் கணக்கீடு செய்ய வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் இவ்வாறு | திறைசேரியால் கடன் எதிர்பார்ப்பில் அறிக்கை இடப்பட்ட உடன் உரிய அமைச்சு மற்றும் செயற்திட்டங்களுக்கு உரிய செலவினங்களைக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு | சகல கடன்களும் கணக்கீடு செய்து உரிய செலவினங்கள் சரியாக பதியப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டு கடன் பணத்தைப் பயன்படுத்தி செய்யப்பட்ட செலவினம் மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அறிவிக்கப்படுகின்றது. எனினும் உரிய நிறுவனத்தால் செலவினங்கள் சான்றுபடுத்தப்படாமையின் காரணமாக அந்த தொகை கணக்கீடு செய்வதற்கு முடியாதுள்ளது. | வேண்டும். |
| (கொ) | 2022 ஆம் ஆண்டினுள் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளினுள் தீர்வையாகியுள்ள நிதி நிலைமைக்கூற்றிற்கு புறம்பாக பேணிச் செல்லப்பட்ட 19 கடன் வகைகளுக்குரிய ரூபா 10,645.2 மில்லியனான தீர்வையாதல்கள் மீளாய்வாண்டினுள் கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் அரசின் நிதிக்கூற்றுக்களில் எதுவித வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்படவில்லை. அதற்கமைய காலரீதியான எண்ணக்கருவிற்கு மாற்றமாக குறித்த வருடத்தினுள் தீர்வையாகிய போதிலும், அந்த வருடத்தினுள் சில வெளிநாட்டுக் கடன்கள் கணக்கு வைக்கப்படாமை தொடர்ந்தும் இடம்பெறுகின்றமை மேலும் அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | கடன்களைக் கணக்கீடு செய்தல் கால எண்ணக்கருவிற்கு இணங்க மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (கோ) | கடன் இலக்கம் 2016035 இற்குரிய வழுக்களுடன் அந்நியச் செலாவணி விகிதம் பயன்படுத்தியதன் காரணமாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்தக் கடன் பெறுமதி ரூபா 962 மில்லியனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | வெளிநாட்டு நாணயங்களை உள்நாட்டுப் பணங்களாக மாற்றும் போது சரியான கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (கௌ) | கடன் இலக்கம் 2018003 இற்குரிய CSDRMS 854-1 அறிக்கையில் 2023 ஆம் ஆண்டிற்குரிய எந்தவொரு மாற்றப்படாதவைகள் காணப்படாத போதிலும் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 24(II) மற்றும் பாதீட்டு செயற்படு நிலைமை மற்றும் நிலுவை நிதியீட்டத்தின் | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்<br>------------------------------------------<br>கடன் இலக்கம் 2018003 இற்குரிய யூரோ 391,123 வேறுபாடு ஒன்றாக | கடன் பெற்றுக்கொள்ளுதலை சரியான காலப்பகுதியில் சரியானதாகக் கணக்கீடு செய்யப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | கீழ் குறிப்பு இலக்கம் 11 இன் பிரகாரம் EUR 727,053 தேறியிருந்த தாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் சமர்ப்பித்த தகவல்களின் படி இந்த கடன் தொகைக்குரிய 2022 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளில் தேறாதிருந்த 2023 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்ட கடன் பெறுமதி EUR 335,930 மாத்திரமாகும். அதன் பிரகாரம் இந்த கடன் தொகைக்குரிய 2023 ஆம் ஆண்டில் தேறியிருந்ததுடன் EUR 391,123 வேறுபாடு காணப்பட்டது. | கவனிக்கப்பட்ட தேறிய பெறுமதி 2023 யூன் மாதம் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் 2023 ஆகஸ்ட் மாதம் கணக்கு பொழிப்பு மூலம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br><br>வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்<br><br>----------------------------------<br><br>கடன் உரிமையாளருடன் மீதிகளை இணக்கம் செய்யும் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் தாமதமாகி 2023.07.18 ஆம் திகதி கிடைத்த 2021 ஆம் ஆண்டிற்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட யூரோ 391,122.75 தேறிய தொகை ஒன்று 2023 ஆம் ஆண்டின் போது குறிப்பிடப்பட்டுள்ளது. 2023.12.31 இல் உள்ளவாறு இறுதி மீதிப் பெறுமதி உரிய கடன் கொடுத்தோரின் அறிக்கையின் இணக்கம் செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 854-1 இல் குறிப்பு சரியானதாகும். | வேண்டும். |
| (ச) | இலக்கம் 2019020 இற்குரிய CSDRMS 854-1 அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் USD 19,273,240 தேறியிருந்ததுடன் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் இந்த கடன் மீதிக்குரிய முன்னைய ஆண்டுகளில் தேறிய 2023 ஆம் ஆண்டில் கணக்கீடு | 2019020 என்ற கடன் இலக்கத்திற்குரிய 2023 சனவரி மாதம் இது விநியோகிக்கப்பட்டமை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் அந்த திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் | கடனைப் பெறுதல் சரியான காலப்பகுதியில் உரியவாறு கணக்கீடு செய்தல் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்ட கடன் பெறுமதி USD 829,937 அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் இந்த கடன் உடன்படிக்கைக்குரிய கணக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்த கடனையும் பெற்றுக்கொள்வதின் பெறுமதி USD 20,103,177 ஆக இருந்த போதிலும் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் அது USD 34,140,577 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | அது 2023 மார்ச் மற்றும் ஆகஸ்ட் மாத கணக்கு பொழிப்பின் மூலம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (சா) | கடன் இலக்கம் 2022011 இற்குரிய CSDRMS 854-1 அறிக்கையின் படி மீளாய்வாண்டில் USD 131,000,000 தேறாதிருந்ததுடன் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் இந்த கடன் தொகைக்குரிய முன்னைய ஆண்டுகளின் போது தேறாதிருந்த 2023 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்ட கடன் பெறுமதி USD 434,861 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் இந்த கடன் உடன்படிக்கைக்குரிய கணக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்த கடன் பெறுவனவுகளின் பெறுமதி USD 131,434,861 ஆக இருந்த போதிலும் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் அது USD 133,765,136 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022011 கடன் இலக்கத்தின் கீழ் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் அ.டொலர் 181,000,000 தேறியதாக 2023 சனவரி மாதம் மற்றும் மார்ச் மாதங்களில் இந்த திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது டன் அதில் அ.டொலர் 133,330,274 மற்றும் முன்னைய ஆண்டின் கணக்கீடு செய்யப்படாத அ.டொலர் 434,861 இனை உள்ளடக்கி அ.டொலர் 133,765,136 அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டள்ளது. | அரசாங்கத்தின் கடன் பெறுவனவுகள் மற்றும் கடன் சேவைகள் கணக்கீடு செய்தல் முறையாக மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (சி) | 23 கடன் உடன்படிக்கைகளுக்குரிய CSDRMS 854-1 அறிக்கையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, 2023 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு உரிய மீதிகளுக்கிடையே கூட்டு மொத்தமாக ரூபா 30,401 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டில் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 24(11) பாதீட்டு செயற்படு நிலை மற்றும் பற்றாக்குறை நிதியீட்டத்தின் கீழ் குறிப்பு இலக்கம் 11 இல் மீளாய்வாண்டின் போது உள்ளபடியாக கடன் தேறல்களில் சரியான பெறுமதி வெளிப்படுத்தப்படாதிருந்தமையும் | கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் காரணமாக இருந்தது.<br><br>• வெளிநாட்டு வளங்கல் திணைக்களத்திற்குரிய கடன் கொடுத்தோரிடம் இருந்து தாமதமாகிக் கிடைத்த தேறிய பெறுமதி மற்றும் மாற்றப்பட்ட தேறிய பெறுமதிகளுக்கு இடையே தேறிய பெறுமதிகளின் பிரகாரம் CS-DRMS | அரசாங்க கடன் பெறுவனவு, கடன் சேவைகள் கணக்கீடு செய்தல் முறையான பிரகாரம் மேற்கொள்ள வேண்டியிருந்த துடன் விநியோகித்தல் தாமதம் அடைவதை குறைத்துக் |

| | | | |
|---|---|---|---|
| அவதானிக்கப்பட்டது. | | தரவு முறைமை சரியாக நாளது வரையாக்கப்பட்டுள்ளது. | கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | | • 2010117, 2010121- ஐ.அ.டொலர் (USD) அந்நிய செலாவணியில் பெறப்பட்ட இந்த கடன் 2010 ஆம் ஆண்டின் போது ஐ.அ. டொலர் அந்நிய செலாவணி விசேட உரித்து (SDR) அந்நிய செலாவணியில் மாற்றப்பட்டுள்ளது. 2010 இல் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் போது விசேட பெறுவனவு உரித்து (SDR) அந்நிய செலாவணியில் காணப்பட்ட மீதி ஐ.அ. டொலர் (USD) நாணய மாற்று மூலம் 2022 ஆம் ஆண்டின் போது செலுத்தி பூர்த்தி செய்ய முடிவுறுத்தப்பட்ட போதிலும் நாணய மாற்று வேறுபாடுகளின் காரணமாக இந்தக் கடனில் செலுத்தப்படாத மீதியொன்று காண்பிக்கப்படுகின்றது. இந்த தொழில் நுட்ப ரீதியான வழுக்களள் CS-DRMS தரவு முறைமையில் சரி செய்யப்பட்டதன் காரணமாக கணக்காய்வில் | |

சுட்டிக்காட்டப்பட்ட வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தது.

- பிரான்ஸ் பிராங் நாணய மாற்றல் செலாவணியில் பெறப்பட்ட கடன், 2002 ஆம் ஆண்டின் போது அந்த கடன் பிரான்ஸ் பிராங் நாணய மாற்றில் யூரோ நாணய மாற்றுலுக்கு மாற்றப்படும் போது காணப்பட்ட மீதி யூரோவின் மூலம் 2019 ஆம் ஆண்டின் போது செலுத்தி பூர்த்தி செய்யும் போது ஏற்பட்ட நாணய மாற்று வேறுபாடு சரி செய்தல்

- உரிய கடன் கொடுத்தோர் ஆன ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பீட்டு ஆய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் கடன் பெறப்பட்டு கடன் மீள கையளித்தல் பெறுமதி தரவு முறைமையில் அகற்றி கடன் கொடுத்தோரில் பெறுவனவுகள் குறிப்புக்கள் மற்றும் சீராக்கங்கள் 2023.05.09 ஆந் திகதி சரிசெய்தல்.

- உரிய கடன் கொடுத்தோருடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பீட்டின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் இந்த கடன் இலக்கங்களுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட தேறிய பெறுமதியின் பிரகாரம் CS-DRMS தரவு முறை சரியாக நாளது வரையாக்கப்பட்டுள்ளது.

- இந்தக் கடன் Science & Technology Human Resource Development செயற்திட்டத்திறகாக ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து கிடைத்த 2019.01.17 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்ட இரண்டு கடன் தொகைகள் ஆகும். இந்த கடன் தொகை இரண்டினதும் கொடுக்கல் வாங்கல்களை குறிப்பிடும் போது உரிய ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்டுள்ள இலக்கம் SRI 3699, SRI 3698 இற்குரிய குறிப்புக்கள் தவறுதலாக மாறி தரவு முறைமையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக கடன் உரிமையாளருடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பீட்டு செய்த போது அவதானிக்கப்பட்டது. இதனை சரி செய்தல்

காரணமாக இந்தக் கடன் மீதி மாற்றமடைந்திருந்தது.

- மேற்கூறப்பட்ட கடன் இலக்கங்களுக்கு உரிய நாளது வரையாக்கல் தொடர்பாக 2023 ஆம் ஆண்டின் போது தேவையான நடவடிக்கைகளுக்காக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் விநியோகித்தல் தாமதமாகக் கிடைக்கின்றமையை குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் கணக்காய்விற்கு அனுப்பப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (சீ) | அரசின் நிதிக்கூற்றுக்களினுள் நிதி நிலைமைக் கூற்றிலிருந்து முழுமையாக புறம்பாக பேணிவரப்பட்ட 08 கடன் வகைகளுக்குரிய ரூபா 518,293 மில்லியனான கடன் மீதி 2022 ஆம் ஆண்டில் கணக்கு வைக்கும் போது அந்தக் கடன் பெற்று கைப்பற்றப்பட்ட எந்வொரு சொத்தும் அரசின் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அது கண்டறியப்படவில்லை. மேலும் இலக்கம் MF/PE/001/CM/2023/05 மற்றும் 2023 சனவரி 20 ஆம் திகதி அமைச்சரவைக் குறிப்பின் பிரகரம் மத்தளை விமான நிலைய செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட கடன் அரசாங்கத்தின் நிதிக் கூற்றக்களை கையேற்பதற்குரிய அந்த கடனை மீள செலுத்தும் கால அட்டவணைக்கு இணங்க கடன் சேவைகள் நிதிக்கு சமமான தொகையொன்று பொது திறைசேரிக்கு அனுப்புவதற்கு விமான நிலையம் செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட கடன் நிதிக் கூற்றுக்களில் கைளிப்பதற்கு உரிய அந்த | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இந்த மீதி நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இந்தக் கடனை பெற்று கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் உரிய பொது முயற்சிகளின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | கடனை பெற்று கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | கடன் மீள செலுத்தும் கால அட்டவணையின் பிரகாரம் கடன் சேவைகள் நிதியத்திற்கு சமமான தொகையொன்று திறைசேரிக்கு அனுப்புவதற்கு விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனிக்கு அனுப்புவதற்கும் அதெற்காக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனி பொதுத் திறைசேரியுடன் புதிய புரிந்துணர்வு உடன்படிக்கை (MOU) கைச்சாத்திட வேண்டியிருந்த போதிலும் அவவ்ாறான உடன்படிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த கடன் தொகையான ரூபா 29,852 மில்லியன் உபகரணமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (சு) | அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களிலும் மற்றும் CSDRMS 854-1 அறிக்கையிலும் மீளாய்வாண்டின் போது 04 கடன் உடன்படிக்கைகள் தொடர்பாக கூட்டுமொத்தமாக ரூபா 821,115,454 மறைக் கடன் தேறல் அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | மறைக் கடன் பெறுமதி ஏற்பட்டதற்கான காரணம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தி அந்த மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (சூ) | அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 24(II) மற்றும் பாதீட்டு செயற்படு நிலை பற்றாக்குறை நிதியீட்டத்தின் கீழ் குறிப்பு இலக்கம் 11 இன் பிரகாரம் கடன் இலக்கம் 2017034 இற்குரிய EUR 77,385 மறை தேறல் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் CSDRMS 854-1 அறிக்கையில் அவ்வாறான மறை தேறியவைகள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட யூரோ 468,861.85 அதாவது ரூபா 180,665.083 தொகை 2022 திசெம்பர் மாதம் கணக்கு பொழிப்பின் மூலம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டு வளங்கல் திணைக்களத்தால் 2023 பெப்ரவரி மாதம் அதி யூரோ 391,477.35 மற்றும் ரூபா 150,846,753 ஆக திருத்தப்பட்டதாக இந்த திணைக்களத்திற்கு | மறை கடன் பெறுமதி ஏற்பட்டதற்கான காரணம் நிதிக்கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கும் அந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த திருத்தத்தின் பிரகாரம் மேலதிகமாக கணக்கீடு செய்யப்பட்ட தொகையான யூரோ 77,384.05 அதாவது ரூபா 29,818,329 தொகை ஆகஸ்ட் மாத கணக்கு பொழிப்பின் மூலம் சரி செய்யப்பட்டுள்ளதுடன் அது மறை எதிர்பார்த்தலாக அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. | |
| (செ) | இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் பாதீட்டு செயற்படுநிலை மற்றும் நிதியீட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட இலக்கம் 11 இல் மாத்திரம் ரூபா 5,081 மில்லியன் தேறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கடன் இலக்கம் 2015030 மற்றும் 2017024 இன் கீழ் குறிப்பு இலக்கம் 11 இல் காண்பிக்கப்பட்டுள்ள கடன் வழங்குனருக்கு, மீள அனுப்பப்பட்ட கடனாக இருந்ததுடன் 854-1 அறிக்கையின் அந்த கடன்களுக்கு உரிய அந்த ஆண்டின் எதிர்பார்ப்புக்களில் மீள அனுப்புதல் குறைக்கப்பட்ட தேறிய கடன் மீதியை காணபிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 11 இல் தனியாக காண்பிக்கப்பட்டுள்ள கடன் பங்களிப்பாளருக்கு மீள அனுப்புதல், குறிப்பு இலக்கம் 24(11) இன் கீழ் ஆண்டின் கடன் பெறுவனவுகளை பதியும் போது சீராக்கப்பட்டுள்ளது. | மறை கடன் பெறுமதி ஏற்பட்டதற்கான காரணம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தி அந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (சே) | அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 24(1) சமரிப்பற்றுள்ள அந்நிய செலவாணி பணம் வங்கி அலகு செயற்திட்ட கடன் மீதிகளுக்கு (Foreign Currency Banking Unit Loan (Project) Balances) உரிய CS-DRMS 854-1 அறிக்கையுடன் பரீட்சித்த போது 2017045 கடன் உடன்படிக்கைக்குரிய 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு CS-DRMS 854-1 அறிக்கையில், 2023 சனவரி 01 இல் உள்ளவாறு அந்த அறிக்கையில் USD 227,823 தொகை அதாவது ரூபா 82,724,927 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும் கடன் மீள செலுத்தப்பட்டிருந்த போதும் USD 227,823 வேறுபாடு அவதானிக்கப்பட்ட போதிலும் அந்த உள்நாட்டு பண பெறுமதியில் வேறு எந்த வேறுபாடும் அவதானிக்கப்படவில்லை. மேலும் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் படி மீள செலுத்தப்பட்ட USD 332,704 பெறுமதியான தொகையை உள்நாட்டு பணமாக மாற்றும் போது USD 1 ரூபா 524.6050 ஆக அசாதாரண அந்நிய செலவாணி விகிதம் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்<br><br>---------------------------------<br><br>இந்த கடன் தொகை ஐ.டொலர்களில் பேணிச் செல்லப்பட்ட போதும் கடன் மீள செலுத்துதல் இலங்கை ரூபாவில் ஆகும். அவ்வாறே 2022 ஆம் ஆண்டின் போது இலங்கை ரூபாக்களில் மீள செலுத்தப்பட்ட தொகை அ.டொலர்களுக்கு மாற்றும் போது வழுக்களுடன் அந்நிய செலாவணி விகிதம் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக CS-DRMS அறிக்கையில் இந்த தொகைக்கு உரிய அ.டொலர் பெறுமதி சரியான பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் கிடைத்த அந்த நாணய மாற்று விகிதம் பயன்படுத்தப்பட்ட தவறும் 2023 இன் கடன் மீள செலுத்துதலில் சீராக்கி சரி செய்யப்பட்டுள்ளது.<br><br>வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்<br><br>----------------------------------------<br><br>பல்வேறு நாணயச் சேவைகளில் (Multicurrency) ஆன இந்தக் கடன் இலக்கத்திற்குரிய 2022.12.30 இல் உள்ளவாறு கடன் மீள செலுத்தல் தவறு ஒன்றினால் இலங்கை ரூபா நாணயத்தின் | அரசாங்கத்தின் கடன் பெறுவனவுகள், கடன் சேவைகள் கணக்கீடு செய்தல் முறையான பிரகாரம் மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பிரகாரம் கடன் பெறப்பட்ட ஐ.அ.டொலர் செலாவணியின் செல்லுபடியான முறைமை திட்டத்தில் மேற்கொள்ளப்படவில்லை. அதனை சரி செய்ததன் காரணமாக இந்த வேறுபாடு இருந்தது. உரிய நாணய மாற்று விகிதம் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (சை) | பதீட்டு செயற்படு நிலை மற்றும் பற்றாக்குறையினை நிதியீட்டம் செய்யும் கூற்றில் குறிப்பு இலக்கம் 14 இன் மூலம் உள்நாட்டு கடன் மீளச் செலுத்தவதற்குரிய தகவல்கள் வெளிப்படுத்தப்பட்ட போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு கடன் மீளச் செலுத்தும் பெறுமதியான ரூபா 337,296 மில்லியனுக்கு உரிய அவ்வாறான குறிப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 24(I) முதல் 24(IV) வரை வெளிநாட்டு கடன் மீள செலுத்துதல் உள்ளடக்கப்பட்டமையால வேறொரு குறிப்பு ஒன்றாக காண்பிக்கப்பட வில்லை. | தகவல்கள் சமர்ப்பிக்கும் போது எண்ணிக்கை ரீதியில் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (சொ) | பங்களிப்பாளர்களினால் அனுப்பப்பட்ட கடன் மீதியை உறுதிப்படுத்துதல், அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களுடன் கணனி கடன் முகாமைத்துவ முறைமையில் 854-1 அறிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது 13 கடன் வகைகளுக்கு உரிய மீதி ரூபா 4,775 மில்லியன் அதிகரித்தும், 14 கடன் வகைகளுக்குரிய ரூபா 5,126 மில்லியன் குறைத்தும் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கடன் மீதி மேலதிகமாக குறிப்பிடுவதற்கான காரணம் பின்வருமாறு<br>• 1990009 - உரிய ஒவ்வொரு நாணய மாற்றில் இருந்தும் கிடைத்த எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு பெறுவனவுகளின் உரித்து அந்நிய செலாவணி மாற்றத்தின் போது முறைமையில் ஏற்பட்ட நாணய மாற்று வேறுபாடு ஆகும்.<br>• 1998037 - Study and Expert Fund II செயற்திட்ட கடன் | கடன் வழங்கும் நிறுவனங்களுடன் கடன் மீதியை தொடர்ச்சியாக இணக்கம் செய்ய வேண்டி இருந்ததுடன் தேவையான சரி செய்தல்கள் உரிய விசாரணைகளின் பின்னர் மேற்கொள்ள வேண்டி இருந்தமை மற்றும் தேவையான பிரகாரம் |

தொகையில் எஞ்சிய கடன் தொகையான Euro 22,583.76 இந்த கடன் தொகைக்குரிய 2020.12.30 ஆம் திகதி கடன் மீள செலுத்துதலை ஈடுசெய்தல்.

வெளிப்படுத்துதல் வேண்டும்.

- ஏனைய கடன் இலக்கம் 11 இற்குரிய 2023.12.31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்த மீதியாக 2022 ஏப்ரல் 13 முதல் செலுத்தப்படாத தவணை (Principal Arrears) கடன் உரிமையாளரால் குறைக்கப்பட்டுள்ளது. 854-1 அறிக்கையின் மீதியிலும் செலுத்தப்படாத தவணைகளில் உள்ளடக்கப்பட்ட மீதியைக் காண்பிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் 854-1 அறிக்கையின் பெறுமதி சரியானதாகும்.

கடன் மீதியைக் குறைத்து பதியப்பட்டமைக்கான காரணம்

- கடன் இலக்கம் 9 இற்குரிய கடன் கொடுத்தோர் நிறுவனமான ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்படுகின்ற

கடன் மீள செலுத்தும் அறிவித்தல் விநியோகித்த திகதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் மற்றும் விசேட பெறுவனவு உரித்துக்கள் அந்நிய செலாவணி மாற்றல் விகிதம் மற்றும் மீள செலுத்துதல் கடன் உரிமையாளர்களுக்கு உள்ளபடியான திகதியில் காணப்பட்ட உரிய அந்நிய செலாவணி மாற்றல் விகிகதத்ததை சமமப்படுத்துதல்.

- பல்வேறு நாணயச் சேவைகளில் (Multicurrency) ஆன 1990003 கடன் இலக்கத்தின் 2023.12.01 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கடன் மீள செலுத்துவதற்கு ஐ.அ.டொலர் 1,012,534.60 தொகைக்குரிய கடன் உரிமையாளரால் அனுப்பப்பட்ட நேரொத்த விசேட பெறுவனவு உரித்து செலாவணி அளவு (SDR equivalent) SDR 770,000 அளவு SDR 7,700,000 ஆக தவறுதலாக தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டிருந்த துடன் 2024.05.22 ஆந் திகதி இது சரி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| | | | • 2012022, 2018087 - இது தொடர்பாக உரிய கடன் கொடுத்தோரிடம் விசாரணை செய்யப்பட்டுள்ளது. எனினும் இது வரையில் எதிர்பார்க்கப்பட்ட பெறுவனவுகள் தொடர்பாக உரிய கடன் உரிமையாளரால் எங்களுக்கு உறுதிப்படுத்தப்படவில்லை. உரிய கடன் உரிமையாளரிடம் இருந்து இது எதிர்பார்க்கப்பட்டமை தொடர்பாக எதிர்பார்ப்பக்கள் கிடைத்த பின் உடனடியாக முறைமை சரி செய்யப்படும்.<br><br>• 2012024, 2019019 – உரிய கடன் உரிமையாளரிடம் இருந்து தாமதமாகக் கிடைத்த எதிர்பார்க்கப்பட்ட பெறுமதியைக் குறிப்பிடுதல் தரவு முறைமையில் சரியாக நாளது வரையாக்கப்பட்டுள்ளது. |
| (சோ) | கடன் வழங்கும் நிறுவனத்திடம் இருந்து கிடைத்த கடன் மீதி உறுதிப்படுத்தலை பரீட்சித்த போது சில கடன் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்களுக்கு செலுத்த வேண்டிய (Fee Overdue Amount) கட்டணமாக அ.டொலர் 50,793 தொகையில் திரவ கட்டணமாக (Liquidity Fee) யூரோ 92,032 தொகையும் காண்பிக்கப்பட்டிருந்தது. | சில வெளிநாட்டு கடன் செலுத்துதல்கள் இடைக்கால ரீதியில் தற்காலிகமாக கைவிடுவதற்கு அரசு எடுத்த கொள்கை ரீதியான தீர்மானத்தின் பிரகாரம் தாக்கத்திற்கு உட்பட்ட கடன்களில் | கடன் வழங்கும் நிறுவனங்களுடன் கடன் மீதியை தொடர்ச்சியாக இணக்கம் செய்ய வேண்டி |

| | | | |
|---|---|---|---|
| | மேலும் இது தொடர்பாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்தேனும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்படாத தவணை, வட்டி மற்றும் தண்டப்பணங்கள் தொடர்பாக கடன் மீள் கட்டமைப்பு செயற்பாடுகளுக்கு உரிய கலந்துரையாடல்களின் போது கலந்துரையாடப்பட வேண்டியிருந்ததுடன் தண்டப்பணம் கணிப்பிடுதல் அல்லது அந்த கடன் சேவைகள் தொடர்பாக தற்போது ஆலோசனைகள் கிடைத்திருக்கவில்லை.<br><br>2014007 கடன் இலக்கத்திற்குரிய 2022.06.20 ஆந் திகதி முதல் 2023.12.20 ஆந் திகதி வரை செலுத்த வேண்டியிருந்த சேவைக் கட்டணம் (Service Fee) அளவு ஒன்று காண்பிக்கப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். | இருந்ததுடன் தேவையான சரி செய்தல்கள் உரிய விசாரணைகளின் பின்னர் மேற்கொள்ள வேண்டி இருந்ததுடன் தேவையான வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (சௌ) | நிலுவை தவணைப் பணம் மேலதிக தாமத வட்டிக் கட்டணத்தின் கீழ் வருகின்ற ஐக்கிய அமெரிக்க தூதுவர் அலுவலகம் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட கொடுப்பனவுகள் கைவிடப்பட்ட 18 கடன் தவணைகளுக்குரிய கடன் மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் மீதிகளின் பெறுமதி USD 58,784,368 ஆக இருந்ததுடன் கைவிடப்பட்டுள்ள கடன் தவைணைப்பணத்தின் பெறுமதி USD 25,439,860 ஆக காணப்பட்டது. எனினும் அது மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்து வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | சில வெளிநாட்டுக் கடன் கொடுப்பனவுகள் இடைக்கால ரீதியில் தற்காலிகமாக நிறுத்துவதற்கு அரசாங்கம் எடுத்த கொள்கை ரீதியான தீர்மானத்தின் பிரகாரம் தாக்கத்திற்குட்பட்ட கடன்களில் செலுத்தப்படாத தவணை, வட்டி மற்றும் தண்டப்பணம் தொடர்பாக கடன் மீள் கட்டமைப்பு செயற்பாடுகளுக்கு உரிய ஒன்றிணைந்த கலந்துரையாடலின் போது கலந்துரையாட முடியுமாக இருந்ததுடன் தண்டப்பணம் கணிப்பிடுதல் அல்லது கடன் சேவைகள் தொடர்பாக தற்போது வரை ஆலோசனை கிடைத்திருக்கவில்லை. | மேற்படி |
| (ட) | தீர்வையாதல் பிற்போடப்பட்ட | அந்தந்த அந்நிய | கடன் |

காலப்பகுதியை கருத்திற்கொள்ளும் போது 2023 ஆம் ஆண்டுக்கு உரியதாக பிற்போடப்பட்ட வெளிநாட்டுக் கடன் 2023 மே 07 ஆந் திகதி அச்சிடப்பட்ட கணனி மயப்படுத்தப்பட்ட கடன் முகாமைத்துவ முறைமையில் 814-1 அறிக்கையில் அந்த தீர்வையாதல் உள்ளடக்கப்பட்ட போதிலும், 2024 பெப்ரவரி 17 ஆந் திகதி அச்சிடப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அதன் பிரகாரம் ரூபா 1,290 மில்லியனான வெளிநாட்டுக் கடன் நிலுவை அரசின் நிதிக்கூற்றுக்களிலும் தீர்வையாகிய கடனாக கணக்கீடு செய்தல் கைவிடப்பட்டிருந்தது.

செலாவணியில் மேற்கொள்ளப்படுகின்ற விநியோகித்தல் குறிப்பு (Disbursements Notices) அறிவித்தல்கள் உரிய கடன் வழங்குனரிடம் இருந்து மாத்திரமே பெறப்படுகின்றது. சில கடன் உரிமையாளர்களிடமிருந்து விநியோக அறிவித்தல் அனுப்பும் போது சில தாமதங்கள் ஏற்பட முடியும். அதன் பிரகாரம் ஏதாவது சந்தர்ப்பத்தில் பெறப்படுகின்ற கடன் நிலுவைகள் (Outstanding balance) அதில் அநேகமானவை நாளது வரையாக்கப்படாமல் காண முடியும். அநேகமாக விநியோகித்தல் பெறுமதிகளை உறுதிப்படுத்தும் உள்ளக முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட முறையில் தாமதமாகிக் கிடைக்கின்ற சில விநியோகத்தில் பெறுமதிகளை உறுதிப்படுத்துதல் உரிய கடன் கொடுத்தோரிடம் இருந்து அறிவித்தல் பெறப்பட்டு இணக்கம் செய்யப்பட்டதன் பின்னரே குறிப்பிடுவதன் (Reconciliation) மூலம் அல்லது அவர்களிடமிருந்து கிடைக்கின்ற மீள செலுத்தும் அறிவித்தல் மூலம் ஆகும். அதனால் CS-DRMS முறைமை மூலம் விநியோகிக்கப்படுகின்ற எந்த ஒரு அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ள விநியோகித்தல் பெறுமதி அவ்வாறு (உரிய

கணக்கீடு செய்தல் சரியான காலப்பகுதியில் மேற்கொள்ளல் வேண்டும்.

அமைச்சில் இருந்து உறுதிப்படுத்தப்படாமல்) கணக்கீடு செய்தல் அல்லது நேரடியான ஒப்பீட்டு செய்வதற்காக பயன்படுத்தல் பொருத்தமற்றதாகும். OPEC Fund, AIIB போன்ற இணைய வழி முறை மூலம் பேணிச்செல்லப்படாத பல்வேறு தரப்பினரின் கடன்களுக்கு உரிய விநியோகித்தல் குறிப்புக்கள் தாமதம் இன்றி அனுப்புமாறு தொடர்ந்தும் அறிவிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு மாதத்தின் போதும் CS-DRMS முறைமையில் இடம்பெறுகின்ற மாதாந்த திட்டம் இடப்பட்ட செயற்பாடுகளின் பின்னர் அந்த மாதத்தில் அறிக்கையிடப்பட்ட புதிய விநியோகித்தல் அளவு மற்றும் ஒவ்வொரு மாத இறுதியிலும் காணப்படுகின்ற கடன் மீதி தொடர்பாக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் 2006 ஆம் ஆண்டில் இருந்து மாத்திரம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்த விநியோகித்தலின் அளவு தொடர்பாக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் ஒவ்வொரு அமைச்சில் இருந்தும் பெறப்படுகின்ற உறுப்படுத்தலுடன் எங்களால் வழங்கப்பட்ட விநியோகித்தல் அளவு மற்றும் நேரொத்த ரீதியில் அல்லாத சந்தர்ப்பங்கள் தொடர்பாக இந்த

| | | | |
|---|---|---|---|
| | | திணைக்களம் அறிவிக்குமாயின் அது தொடர்பாக உரிய கடன் கொடுத்தோரிடம் இருந்து விசாரணை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டமையால் அதன் மூலம் இந்த தாமதத்தை குறைத்துக் கொள்வதற்காக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்துடன் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | |
| (டா) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அரசாங்கத்தால் மூலதன பங்களிப்பாக ரூபா 1,124,665,353,761 வழங்கப்பட்டிருந்த 13 பொது முயற்சிகளில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அப் பெறுமதி ரூபா 1,047,966,900,772 ஆக இருந்ததுடன் அந்த நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றின் தேறிய சொத்துக்கள் (மொத்த சொத்துக்கள் – மொத்த வெளிப் பொறுப்புக்கள்) பெறுமதிகளின் மறை பெறுமதி ரூபா 630,632,144,273 ஆக இருந்தது. அதன் பிரகாரம் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் நிதிச் சொத்துக்களின் கீழ் இந்த மூலதன பங்களிப்பு காண்பிக்கப்பட்ட போதும் அப் பெறுமதி முழுமையாக பதிவழித்தல் (impairment) முழுமையாக வெளிப்பொறுப்புக்களின் கீழ் பேணி செல்கின்ற நிலைமைக்கு உட்பட்டு இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் இதற்காக அடிப்படையாக தாக்கம் அளித்த உரிய நிறுவன நட்ட பெறுவனவின் காரணமாக நிறுவகிக்கப்பட்ட இலாபம் மறை பெறுமதியை கொண்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | பொது முயற்சிகளில் நீண்ட கால கடன்களை உள்ளடக்கி வெளிவாரி பொறுப்புக்கள் மொத்த தேசிய உற்பத்தியில் 07 சதவீதம் மாத்திரம் ஆகும். இதற்கு பிரதான காரணமாக பொது முயற்சிகளின் கிரயம் பின்பற்றுகின்ற விலை பொறிமுறை ஒன்று இல்லாது இருந்தமையும் சந்தை விலைக்குப் பதிலாக சலுகை விலையில் பொருட்கள் வழங்கும் போது அந்தக் கிரயம் நேரடியாக அரச நிதி மாணியங்கள் ஊடாக நிதியேற்றம் செய்யப்படாமையின் காரணமாக தொடர்ச்சியாக பொது முயற்சிகளினால் நட்டம் நிலைமை அறிக்கையிடுவதற்கும், அந்த நட்டம் அரச வங்கிகள் ஊடாக நிதியேற்றம் செய்யப்படுவதும் ஆகும். இதனிடையே இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, சிறி | அரசாங்கத்தின் உரிமைத் தன்மையில் உள்ள நிறுவனங்களில் நிதி நிலமையை கால ரீதியில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அவற்றின் பெறுமதியில் குறைவடையுமாயின் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் உரிய பிரகாரம் உள்ளடக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | லங்கன் எயாலைன்ஸ் போன்ற உபாய வழிகளில் இருந்து முக்கியமாக பொது முயற்சிகளினால் தொடர்ச்சியாக அறிக்கை இடப்பட்ட நட்ட நிலைமை அரச வங்கி ஊடாக நிதியேற்றம் செய்தல் கடந்த ஆண்டுகளில் குறித்த ரீதியில் காணப்படுகின்ற போக்காகும். இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானங்களின் தாக்கமும் மேற்கூறப்பட்ட நிலைக்கான காரணம் ஆகும். | |
| (டி) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,019,627,985,708 மற்றும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 892,034,785,542 ஆன அரசாங்கத்தின் மூலதன பெறுமதியுடன் 05 பொது முயற்சிகள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 371,771,137,033 மாத்திரம் ஆகும். ஆதன் பிரகாரம் இந்த அரசாங்க தொழில் முயற்சிகளில் முதலீடு செய்யப்பட்ட மூலதன பங்களிப்பு பெறுமதி (impairment) குறைவடைந்து செல்கின்றமை அவதானிக்கப்பட்டது. | மேற்படி | மேற்படி |
| (டீ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட அரசாங்கத்தின் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான அரசாங்க மூலதன பங்களிப்பு பெறுமதி ரூபா 2,165,981,657,905 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 2,121,653,720,125 அரசாங்கத்தின் கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை மற்றும் அரசாங்கத்திற்கு சொந்தமான கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் அத்திகதியில் இந்த தொழில் முயற்சி நிறுவனங்களில் தேறிய சொத்துக்களின் மொத்த பெறுமதி ரூபா 1,669,676,388,290 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட மூன்று வகைகளுக்குரிய | மேற்படி | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | அரசாங்கத்தின் பங்களிப்பு அந்த நிறுவனங்களின் தேறிய சொத்துக்களுடன் ஒப்பிடும் போது ரூபா 451,977,331,835 இனால் அதாவது 21 சதவீதத்தால் வலுவிழந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (டு) | 2022 ஆம் ஆண்டில் அரசாங்கத்தால் முதலீடு செய்யப்பட்ட 32 நியதிச்சட்ட சபைகளுக்குரிய ரூபா 117,718,706,426 தேறிய இலாபம் உழைக்கப்பட்ட போதிலும் 36 அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான 30 கம்பனிகளுக்குரிய ரூபா 804,795,113,607 மற்றும் ரூபா 133,722,486,417 ஆக தேறிய நட்டம் உழைத்ததன் காரணமாக 98 சதவீதத்திற்குரிய ஒட்டுமொத்தமாக ரூபா 820,798,893,548 தேறிய நட்டம் உழைக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின் படி 2022 ஆம் ஆண்டில் நடு ஆண்டு சனத்தொகை 22,181,000 ஆக இருந்ததுடன் அதன் பிரகாரம் அரசாங்கத்திற்குச் சொந்தமான 98 தொழில் முயற்சிகளுக்காக 2022 ஆம் ஆண்டிற்காக செலவிடப்பட்ட ஒரு நபரின் தேறிய நட்டம் ரூபா 37,000 மாத்திரமாக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | மேற்படி | மேற்படி |
| (டூ) | 08 பொது முயற்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட நேரடி மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அந்த நிறுவனங்களின் மூலதனப் பங்களிப்பு ரூபா 10,803 மில்லியனாக காணப்பட்டதுடன், அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 4,323 மில்லியனாக காணப்பட்ட காரணத்தால் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அரசின் நிதிக்கூற்றுக்களினுள் மூலதனப் பங்களிப்பு ரூபா 6,480 மில்லியன் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதி மற்றும் மறை மீதிகள் உறுதிப்படுத்தலின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே காணப்படுகின்ற வேறுபாடுகள் எங்களாலும் அவதானிக்கப்பட்டதுடன் இந்த வேறுபாடு ஏற்படுவதற்கு தாக்கமளித்த காரணம் எதனால் என்பதை இனங்காண்பதற்காக தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதுடன் உரிய வேறுபாடுகள் சரியான பிரகாரம் இனங்கண்ட பின்னர் | அரச உரிமை தன்மையில் உள்ள நிறுவனங்களுடன் கால ரீதியில் மீதிகளை உறுதிப்படுத்தி பெற்று மதிப்பீட்டுக்கு உட்படுத்தி சரியான நடவடிக்கை எடுப்பதற்கும் மற்றும் கணக்குகளில் சரியான தன்மையை உறுப்படுத்துவ |

| | | | |
|---|---|---|---|
| | | முறையான அங்கீகாரத்துடன் பிரதான பேரேட்டுக் கணக்குகளில் அறிக்கை இடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | தற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (டெ) | ஸ்ரீ லங்கா இன்ஸ்சிடியூட் ஒப் பயோடெக்னொலொஜி பிரைவட் லிமிடெட் (Sri Lanka Institute of Biotechnology (Pvt) Ltd) என்ற நிறுவனத்தில் இருந்து கிடைத்த நேரடி மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பங்கொன்றின் விலை ரூபா 10 ஆன 52,472,573 பங்குகள் பொது திறைசேரிக்கு சொந்தமாக இருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் குறிப்புக்களில் பங்கொன்றின் விலை ரூபா 100 ஆன 200,000 பங்குகள் மூலதன பங்களிப்பாக காணப்படுகின்றமை குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிறுவனங்களுக்குரிய மூலதன பங்களிப்பு ரூபா 504,725,732 இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | ஸ்ரீ லங்கா இன்ஸ்டியூட் ஒப் பாயோடெக்னொலொஜி பிரைவட் லிமிட்டட் (Sri Lanka Institute of Biotechnology (Pvt) Lltd) இற்கு உரிய வரிசை அமைச்சின் செலவினத் தலைப்பில் உரிமை மூலதன செலவின விடயத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள மூலதன பங்களிப்பு பிரதான பேரேட்டுக் கணக்குகளில் அறிக்கை இடப்படாமையின் அடிப்படையில் இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்ததுடன் இந்த ஆண்டின் போது உரிய அறிக்கையிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மேற்படி |
| (டே) | 02 கம்பனிகளின் உரிமை பங்குகளின் எண்ணிக்கை மற்றும் அதன் பேரளவு பெறுமதியின் பிரகாரம் கணிப்பிடும் போது 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பங்குப் பெறுமதி ரூபா 5,141 மில்லியன் ஆக இருந்த போதிலும் அது அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் ரூபா 14,476 மில்லியன் ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் மூலதன பங்களிப்பில் ரூபா 9,335 மில்லியன் இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | போகல கிரபைட் லங்கா பீஎல்சீ இன் பங்கு மூலதனம் கணிப்பிடும் போது தவறு ஒன்று ஏற்பட்டிருந்தமையை அவதானிக்கின்றோம். உரிய கணிப்பீடுகளை சரி செய்து கொள்வதற்கு குறிப்பிடுகின்றோம்.<br><br>மிஹின் லங்கா (தனியார்) கம்பனி 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட மூலதன பங்களிப்பு உரிய பிரதான பேரேட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்ட போதும் அதற்கான பங்கு | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | | சான்றிதழ் விநியோகிக்கப்படவில்லை. எனினும் உரிய நிறுவனத்திற்கு உரிமை மூலதனமாக வழங்கப்பட்ட பணம் உரிய பிரதான பேரேட்டுக் கணக்கில் அறிக்கையிடப்பட்டுள்ளது. | |
| (டை) | 1994 ஏப்ரல் 20 திகதிய இலக்கம் 30/94 கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம், வெளிநாட்டு மானியம் தொடர்பான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பொது திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்ட போதும், மாதிரி பரிசோதணையின் மீது பெற்றுக் கொண்ட தகவல்களின் பிரகாரம், 2023 ஆண்டினுள் அவ்வாறு பொது திறைசேரியை அறிவூட்டாது 11 நிறுவனங்களுக்காக கூட்டுத் தொகை ரூபா 22,210 மில்லியன் ஆன வெளிநாட்டு மானியங்கள் நேரடியாக கிடைத்திருந்ததுடன் அப் பெறுமதிக்கு ஏற்பாடு பெற்றுக் கொண்டு நிதிக்கூற்றுக்களிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு அறிவித்து பெறப்பட்ட மானியம் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றது. ஏனைய நிறுவனங்களுக்கு மாத்திரம் அறிக்கையிடப்பட்ட மாணியங்கள் தொடர்பாக அந்த சுற்றறிக்கை, ஆலோசனைக் கோவை, நிதிப்பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் சகல அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், நியதிச் சட்ட நிறுவனங்களின் தலைவர்களின் பொறுப்பாகும்.<br><br>இது தொடர்பாக வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தால் மானியங்களுக்கான நிதியேற்பாடு ஒதுக்குவதற்கு மற்றும் / அல்லது திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் உரிய பிரகாரம் கட்டுநிதி விடுவிப்பதற்கு முன் உரிய மாணியங்களுக்காக இந்த திணைக்களத்தின் பரிந்துரை பெறப்பட்டிருந்ததா என | சுற்றறிக்கை ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கைகளை எடுத்தல், அமைச்சின் கீழ் வருகின்ற பல்வேறு திணைக்களங்களுக்கு இடையே சரியான தொடர்பு மற்றும் இணைப்பினை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதற்கு முரணாக நடவடிக்கை எடுக்கின்ற தரப்பினர்களுக்கு உரிய பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பரீட்சித்து அவ்வாறான பரிந்துரையுடன் உள்ள மாணியங்களுக்காக மாத்திரம் நிதியேற்பாடு வழங்குதல் அல்லது கட்டுநிதியை விடுவித்தல் பொருத்தமானதாக இருந்நது அவதானிக்கப்பட்டது. மேலும் மாணியங்கள் தொடர்பாக தற்போது வரைவு செய்யப்படுகின்ற அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் சட்ட ரீதியான ஏற்பாடுகளை வழங்குதல் பொருத்தமானது என முன்மொழியப்பட்டுள்ளது. | |
| (டொ) | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் 2022 ஏப்ரல் மாதம் 12 திகதி வெளியிடப்பட்ட இடைக்கால வெளிநாட்டு கடன் செலுத்துவதை இடைநிறுத்தும் கொள்கை ரீதியான தீர்மானத்தின் பிரகாரம் 2022 ஏப்ரல் மாதம் 13 திகதி முதல் மீளாய்வாண்டு இறுதித் திகதிக்கு 401 கடன் உடன்படிக்கைகளிற்கு உரிய கடன் தவைணகளில் உள்ளடக்கப்பட்ட கடன்செலுத்துதலாக ரூபா 1,439,066 மில்லியனும், வட்டியாக ரூபா 673,964 மில்லியனும் செலுத்துவதை இடைநிறுத்தியிருந்த போதும் அது தொடர்பாக அரசின் நிதிக்கூற்றுக்களில் எவ்வித வெளிப்படுத்தல்களும் செய்திருக்கவில்லை. | 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட இடைக்கால வெளிநாட்டுக் கடன் செலுத்துதல் கைவிடும் கொள்கை ரீதியான தீர்மானம் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிநாட்டுக் கடன் மீதி தொடர்பான விளக்கமளித்தல் குறிப்பு இலக்கம் (iii) இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களின் பயனர்களுக்கு முக்கியமான தகவல்களை பொருத்தமாக வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (டோ) | மீளாய்வாண்டின் போது உடன்படிக்கை செய்யப்பட்ட போதும் தேறாத கடன் இலக்கம் 2023015 இன் கீழ் XDR 148,500,000 அதாவது ரூபா 63,725 மில்லியன் வெளிநாட்டு கடன் தொடர்பாக அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த கடன் மீதி சமூக பாதுகாப்பு செயற்திட்டத்திற்காக 2023.09.21 ஆந் திகதி சர்வதேச அபிவிருத்தியை சமப்படுத்துதல் மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்ட விசேட பெறுவனவு உரித்துக்கள் ரூபா 148,500,000 கடன் | மேற்படி |

| | | |
|---|---|---|
| | தொகையாக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் போது எந்த ஒரு விநியோகித்தலும் அறிக்கை இடப்படவில்லை. இந்த கடன் விநியோகித்தல் 2024.03.21 ஆம் திகதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | |
| (டௌ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைபெற்ற ஒன்றிணைந்த நிதிய மறைப் பெறுமதியான ரூபா 990,490,932,444 மற்றும் தேறிய சொத்துக்கள் சீராக்கல் கணக்கில் மறைப் பெறுமதியான ரூபா 14,040,298,131,574 கூட்டப்பட்டு ரூபா 15,030,789,064,018 பொது நிதியம் (General Fund) உரிமை மூலதனம்/ தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றில் குறிப்பிடப்பட்ட போதிலும், அந்த கணக்கீடு செய்தல் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது நிதி அறிக்கையிடல் முறைமையில் இடம் பெறுகின்ற குறைபாடுகளைக் குறைப்பதற்காக அரசாங்க கணக்கு குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் திரண்ட நிதியத்தின் பெறுமதியிலும் மற்றும் தேறிய சொத்துக்களின் சீராக்கல் கணக்கிலும் பெறுமதிகளின் கூட்டுமொத்தம் பொது நிதியம் (General Fund) ஆக குறிப்பிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br><br>உரிமை மூலதனம் / தேறிய சொத்துக்கள் மாற்றல் கூற்றின் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி அதற்குரிய ஆண்டில் இடம் பெற்ற மாற்றங்களைப் போன்று மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டிற்காகவும் ஆரம்ப மீதி மற்றும் ஆண்டின் போது ஏற்பட்ட வேறுபாடுகள் உள்ளடக்கப்பட வேண்டியிருந்தமையால் | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட திரண்ட நிதியத்தின் மீதி மற்றும் தேறிய சொத்துக்கள் சீராக்கல் கணக்கின் மீதி என்பவற்றின் மொத்த பெறுமதி சேர்த்துக் காணப்பட்டது. | |
| (த) | பொது முயற்சிகளின் நிதிக் கூற்றுக்களை பகுப்பாய்வு செய்த போது 06 பொது முயற்சிகளுக்குரிய ரூபா 6,053,920,627 பெறுமதியொன்று பொதுத் திறைசேரிக்கு செலுத்த வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும், அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் இந்த மீதிகளுக்குரிய நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் ''நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிப்பதற்கான அறிக்கை இடப்படுகின்ற காலப்பகுதி மற்றும் அளவிடல் திட்டம்'' இன் கீழ் நடப்பாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வருமானம் காசு அடிப்படையின் கீழ் கணக்கீடு செய்யப்படுவதாக தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பொது முயற்சிகளில் இருந்து கிடைக்க வேண்டிய இலாப பங்கு மற்றும் வருமானங்கள் போன்றவை அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. | மேற்படி |
| (தா) | நிதிக்கூற்றுக்களில் அரசின் உரிமை பங்களிப்பு கொழும்பு பங்குச் சந்தையின் பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் மேற்கொண்ட முதலீடு மற்றும் பட்டியலிடப்படாத கம்பனிகளில் மேற்கொண்ட முதலீடாக வகைப்படுத்தியிருக்கவில்லை. மேலும் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் உரிமையின் பெறுமதி அவற்றின் பெயரளவு பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும், அவற்றின் 2023 திசெம்பர் 31 திகதியிலான சந்தை பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க | அரசாங்கத்தின் உரிமைப் பங்களிப்பு கொழும்பு பங்குச் சந்தையில் நிரற்படுத்தப்பட்ட கம்பனியில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் மற்றும் கொழும்பு பங்குச் சந்தையின் நிரற்படுத்தப்படாத கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளாக | மேற்படி |

| | |
|---|---|
| வில்லை. | வகைப்படுத்த வேண்டி இருந்தமை எங்களால் அறிவிக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக காணப்படுகின்ற ஏற்பாடுகள் மற்றம் ஏனைய பிரமாணங்கள் தொடர்பாக எமது திணைக்களத்திற்கு அறிவிக்குமாறு தயவுடன் கூறுகின்றோம். |

## 2. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கு இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கு இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) அதிகாரச்சட்டம் | 2021 இன் 12 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தம்) அதிகாரச்சட்டத்தினால் மற்றும் 2013 இன் இலக்கம் 15 கொண்ட நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தம்) அதிகாரச்சட்டத்தினால் திருத்திய 2003 இன் இலக்கம் 3 கொண்ட நிதி முகாமைத்துவ (பொறுப்பு) அதிகாரச்சட்டம் பிரகாரம், ஏதேனும் ஆண்டு இறுதியில் காணப்பட முடியுமான உச்ச பொறுப்பு பெறுமதி அவ்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் 80 சதவீதத்தை விஞ்சக்கூடாத போதும் 2023 திசெம்பர் 31 திகதி வரையில் அவ் எல்லை 104.06 சதவீதம் ஆக இருந்தது. விபரம் பின்வருமாறு. | குறிப்பிட்டுக்கொள்கின்றோம். | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| பொறுப்புக்கள் | 2023 திசெம்பர் 31 திகதியன்று பொறுப்புக்கள் பெறுமதி ரூபா பில்லியன் |
|---|---|
| வங்கி மேலதிக பற்று | 80 |
| மத்திய வங்கி முற்பணம் | - |
| அரசாங்க கடன்கள் | 29,150 |
| நிதிக்கூற்றுக்களினூடாக கணக்கீடு செய்யப்படாத பொறுப்பு | |
| - கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன்- | 15 |

| | |
|---|---|
| மொத்த பொறுப்புக்கள் | 29,245 |
| மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி | 28,103 |
| **மொத்த பொறுப்புக்கள் மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக(%)** | **104.06** |

* பொது திறைசேரியின் பிணைமுறி மீது பொது முயற்சிகள் மூலம் பெற்றுக் கொண்டுள்ள கடனிற்காக வங்கிக்கு வழங்கியுள்ள பிணைமுறி மற்றும் நிவாரணக் கடித பெறுமதியான ரூபா 2,034 பில்லியன் மற்றும் அமைச்சு, திணைக்களம் மற்றும் விஷேட செலவு அலகுகளில் கணக்காய்விற்கு சமர்ப்பித்த பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றின் பிரகாரம் ரூபா 117 பில்லியன் பெறுமதியான பொறுப்புக்கள் மேற்குறிப்பிட்ட பொறுப்புக்களிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| ‘‘2006 ஆண்டின் இறுதியில் வரவுசெலவுத் திட்ட இடைவெளி, அவ் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தை விஞ்ஞாததாக மற்றும் அம் மட்டத்தை அதன் பின்னர் தொடர்ந்து பேணிச் செல்வதற்கு பொறுப்பேற்று அரச கடனை தூரநோக்கு மட்டம் வரை குறைத்தல்’’ அரசாங்கத்தினால் கடைபிடிக்க வேண்டிய பொறுப்புவாய்ந்த நிதி முகாமைத்துவத்திற்கு அடிப்படையான நோக்கமாக 2003 இன் இலக்கம் 3 கொண்ட நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 3(அ) பிரிவில் காட்டப்படுகிறது. எனினும் மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட பாதீட்டு இடைவெளியை, மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தை விஞ்சாதவாறு மதிபிடவும், மீளாய்வாண்டு இறுதியிலான உள்ளவாறான பாதீட்டு இடைவெளி, மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தை விஞ்சாதவாறு பேணிச் செல்ல நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிற்கு இயலாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு. | குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி | பாதீட்டு இடைவெளி | | மதிப்பிடப்பட்ட பாதீட்டு இடைவெளி, மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக | உள்ளவாறான பாதீட்டு இடைவெளி, மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக |
| --- | --- | --- | --- | --- |
| | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | | |
| ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | நூற்றுக்கு | நூற்றுக்கு |
| ---------- | -------- | -------- | ---------------- | --------------------- |
| 28,103 | 3,783 | 2,584 | 13.46 | 9.19 |

| | | | | |
| --- | --- | --- | --- | --- |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | நி.பி 373 இன் பிரகாரம், 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளபடியாக அமைச்சு மற்றும் திணைக்களங்களின் 99 கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 3,782 மில்லியனான வரவு மீதி தீர்க்கப்படாமல் காணப்பட்டது. அதில் ரூபா 50 மில்லியன் மீதியானது பல ஆண்டுகளாக நிலவி வருவதுடன், அம் மீதிகளை தீர்த்துக் கொள்ள 2023 திசெம்பர் 31 திகதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ***01 வருடத்திற்குக் குறைந்த** உடனடியாக தீர்க்க வேண்டியதாக உரிய நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.<br>***1-2 வருடங்களுக்கு இடையே** அறவிடுவதற்காக உரிய நிறுவனத்தால் வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் வழக்கு | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தீர்ப்பு கிடைக்கும் வரை இந்த பணத்தை அறவிடுவதற்கான இயலுமை காணப்படவில்லை.

***5 வருடங்களுக்க மேல்**

இந்த மீதியைத் தீர்ப்பதற்காக தேவையான ஆலோசனைகள் உரிய நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் நிறுவனத்துடன் பல தடவைகள் கலந்துரையாடல் நடாத்தப்பட்டிருந்தது.

## 3. முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 07 பங்களிப்பாளர்களிடம் இருந்து 10 செயற்திட்டங்களுக்கு உரியதாக கிடைத்திருந்த போதும், உரிய நோக்கத்திற்கு ஈடுபடுத்தாமல் கூட்டுமொத்தமாக ரூபா 73,426,055 வெளிநாட்டு மானியம் மீண்டும் வழங்குனருக்கு அனுப்பி வைக்கபட்டிருந்தது. | செலவினங்கள் செய்யப்படாமல் சேமிப்பில் காணப்படுகின்ற தொகையை தொடர்ந்தும் பயன்படுத்தாது இருந்தமை செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் அமைச்சு / திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்ட பின்னர் மற்றும் பங்களிப்பு நிறுவனத்தின் கோரிக்கையின் | இலங்கை அரசாங்கத்திற்கு கிடைக்கின்ற வெளிநாட்டு மாணியங்கள் உச்ச அளவில் உரிய நோக்கங்களுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அடிப்படையில் மீள அனுப்பப்படுகின்றமையால் அது வெளிநாட்டு மாணிய வருமானத்தில் உள்ளடக்கப்பட வில்லை. | |
| (ஆ) | அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட 07 திறைசேரி முற்பணக் கணக்குகளில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுமொத்தமாக ரூபா 1,293,506,349 மீதியொன்று தீர்த்து வைக்கப்படாமல் பல வருட காலமாக தொடர்ச்சியாக பேணிச் செல்லப்பட்டிருந்தது. | • விவசாய திணைக்கத்திற்குச் சொந்தமான 05 கணக்குகள் தொடர்பாக எம்மிடம் உள்ள தகவல்கள் யாவும் விவாசயத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த கணக்குகள் தொடர்பாக கணக்கு குழுவில் கலந்துரையாடப்பட்ட பின்னர் தேவையான அங்கீகாரத்தைப் பெற்று இதனைக் கலைக்கப்பட்ட முற்பணக் கணக்கில் முழுமையாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள து. பின் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகி ன்றது.<br><br>• அரசாங்க கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஆலோசனையின் படி 7000-0-000-0-002-0 கணக்கை தீர்த்து வைப்பதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளத ாக 2023.07.20 ஆந் திகதிய FBF/05/2022 என்ற கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள | நீண்காலமாக தீர்க்கப்படாமல் காணப்படுகின்ற முற்பணக் கணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | து. பின் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>• 999 கணக்கு தீர்த்து வைப்பதற்காக போதியளவான சான்றுகளை சேகரித்து மூடுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (இ) | அரசாங்க உத்தியோகத்தர்களின் 14 முற்பணக் கணக்குகளின் கூட்டுமொத்தமான ரூபா 9,027,522 மீதி மற்றும் மேலும் 02 முற்பணக் கணக்குகளின் கீழ் கூட்டுமொத்தமான ரூபா 408,233 ஆன மறை மீதி என்பன தீர்த்து வைக்கப்படாமல் பல வருட காலமாக தொடர்ச்சியாக பேணிச் செல்லப்பட்டிருந்தது. | இந்த கடன் மீதி பல்வேறு சந்தர்ப்பங்களின் போது அமைச்சு மற்றும் திணைக்களங்கள் மூடப்பட்டதன் அடிப்படையில் உருவாகி இருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த மீதிகள் தொடர்பாக திணைக்களத்திற்கு உரியதாகக் காணப்படுகின்ற பழைய தகவல்கள் பகுப்பாய்வு செய்து செயலிழந்து காணப்பட்டமைக்கான காரணங்களை சரியாக இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மேற்படி |
| (ஈ) | 2008 மே 22 திகதி நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட இலக்கம் 1550/7 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் 7 பந்தி பிரகாரம் இலங்கையிலிருந்து ஆரம்பமாகும் விமான பயணத்திற்காக இலங்கைக்கு வெளியில் விநியோகிக்கும் அல்லது விற்வனை செய்யும் ஒவ்வொறு பயணச் சீட்டு தொடர்பாகவும் அவ்வாறான பயணச் சீட்டு விற்பனை செய்த முறை மற்றும் அல்லது விநியோகிப்பதை கவனிக்காது அ.டொ 60 மிகை அறவீடு அல்லது அத்தொகைக்கு சமமான தொகை அறவிட வேண்டுமெனவும், அவ் வர்த்தமானியில் 8 பந்தி பிரகாரம் அவ்வாறு திரட்டும் மிகை அறவீட்டுத் தொகை சிவில் விமான சேவை | அமைச்சரவை பத்திர இலக்கம் CP/24/0226/628/015 என்ற ‘‘இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் செலவினத்திற்கான நிதியங்களை வழங்குதல்’’ என்ற வகையில் துறைமுகங்கள் , விமான சேவைகள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் சமர்ப்பித்த 2024.01.30 ஆந் திகதிய குறிப்பிற்குரிய 2023.12.19 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் | அரசாங்க வருமானங்களைச் சேகரித்தல் தொடர்பாக முறையான திட்டம் ஒன்றைத் தயாரித்து அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கின்றவாறு திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2008 ஆகஸ்ட் 01 திகதி முதல் 2023 திசெம்பர் 31 திகதி வரை சிவில் விமான சேவை அதிகாரசபையினால் மிகை அறவீடாக ரூபா 22,113 மில்லியன் திரட்டியிருந்த போதும் அத்தொகையை திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்திருக்கவில்லை. மேலும் இந்த மிகை அறவீட்டை தொடர்ந்தும் அறவிட இயலுமை காணப்படுவதாகவும், அம் மிகை அறவீட்டுத் தொகையை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கும் சட்டக் கடப்பாடு காணப்படுவதாகவும் குறிப்பிட்டு 2017 ஏப்ரல் 07 திகதிய சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட கடிதத்துடன் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அறிவூட்டப்பட்டிருந்தார்.<br>அவ்வாறாயினும், கணக்காய்வு திகதியளவிலும் இம் மிகை அறவீட்டுத் தொகையை சிவில விமான சேவைகள் அதிகாரசபையிடமிருந்து அறவிட பொது முயற்சிகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது 2023 நவம்பர் மாதம் முதல் 2024 மார்ச் மாதம் வரை வெளிநாட்டு விற்பனை மிகைக் கட்டண வருமானம் ஆன ரூபா 1,766,269,517 தொகையில் ரூபா 393,000,000 தொகை நிறுத்தி வைக்கப்பட்ட பின்னர் ரூபா 1,373,269,517 தொகை திரண்ட நிதியத்தில் 2024.05.10 ஆந் திகதி செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வருமானம் இரண்டு வாரங்கள் வீதம் ஆன இரண்டு காலாண்டிற்கு விமான சேவைகள் நிறுவனத்தில் இருந்து அறவிடப்படுவதுடன் இரண்டாவது காலாண்டில் நிதி அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதியே கிடைக்கின்றமையும் அதன் பிரகாரம் எதிர் வரும் மாதங்களுக்குரிய பண அனுப்புதல்கள் ஏதாவது ஒரு மாதம் முடிவடைந்து அடுத்து வரும் மாதத்தின் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக இலங்கை சிவில் விமாான சேவைகள் அதிகார சபையின் தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 190,789,890,831 உப கடன் மீதி பெறவேண்டியதாக காணப்பட்டது. உரிய நிறுவனம் உப கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தாமையின் காரணமாக 03 நிறுவனங்களுக்குரிய 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 1,316,324,489 நிலுவை உப கடன் மீதி காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம். | அரச உபகடன்களை வழங்குதல், கட்டுப்படுத்துதல் மற்றும் உபகடன் சேவையிடல் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உப கடனுக்காக கிடைக்க வேண்டிய வட்டி பெறுமதி ரூபா 9,439,025,443 ஆக இருந்ததுடன், 03 நிறுவனங்களுக்குரிய கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட அறவிட வேண்டிய வட்டி பெறுமதியின் கூட்டுமொத்தம் ரூபா 912,059,388 ஆக இருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம். | மேற்படி |
| (எ) | 2023 சனவரி 01 ஆம் திகதி வரையில் 02 நிறுவனங்களுக்குரிய உப கடன் உடன்படிக்கைகள் 04 இன் கீழ் காணப்பட்ட உப கடன் மீதிகளின் கூட்டு மொத்தமான ரூபா 114,487,221 தொகையில் மீளாய்வாண்டின் போது எந்தவொரு நிலுவைப் பணத்தையும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | • சனச நிறுவனத்தின் ரூபா 11,114,479 உபகடன் தொகை அறவிடப்படாமையினால் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.<br>• ரூபா 455,065 கடன் மீதி இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில் நுட்ப திணைக்களம் மூலம் பேணிச் செல்லப்படுகின்ற முறைமையின் பிரகாரம் மீதி ஒன்று இல்லாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.<br>• ரூபா 4,496 தொகை மீள செலுத்துவதற்காக நிதியம் காணப்படாது இருந்ததுடன் நிதியத்தின் வட்டி வருமானமாக திறைசேரி பிரதி செயலாளருக்கு நிதி மாற்றப்பட்டுள்ளது.<br>• ரூபா 102,913,181 தொகை இதற்கு முன்னைய சந்தர்ப்பத்தின் போது இலங்கை மத்திய வங்கியின் மூலம் உப கடன் உத்தேச திட்டத்தின் கீழ் நிதியீட்டம் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த மீதியும் இலங்கை மத்திய வங்கியின் பதிவேடுகளில் இருந்து | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | | அகற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஏ) | 2023 யூன் 28 ஆந் திகதிய இலக்கம் 23/1221/604/121 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் உள்நாட்டு கடன் மீள் கட்டமைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் உள்நாட்டு கடன் மீள் கட்டமைப்பிற்குரிய தகவல்கள் பின்வருமாறு. | | |
| (i) | இலங்கை மத்திய வங்கியினால் கொள்வனவு செய்ப்பபட்ட ரூபா 2,368,416,351,609 திறைசேரி உண்டியல் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 344,728,000,400 முற்பண தொகை, ரூபா 220,797,000,000 பெறுமதியான புதிய திறைசேரி உண்டியல் மற்றும் ரூபா 2,492,347,352,009 பெறுமதியான புதிய திறைசேரி பிணை முறியாக மாற்றப்பட்டிருந்தது. | 2023.06.28 ஆந் திகதிய இலக்கம் 23/1221/604/121 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மற்றும் அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம் உள்நாட்டுக் கடன் மீள்கட்டமைப்பு நிகழ்ச்சித் திட்ட செயற்பாடுகள் கட்டியெழுப்பப்பட்டதுடன் அதன் பிரகாரம் அவர்களின் அவதானிப்புடன் இணங்குகின்றோம். | தகவல்கள் சமர்ப்பிக்கப்படும். |
| (ii) | கூட்டுப் பெறுமதி ரூபா 3,204,461,897,219 ஆக காணப்பட்ட திறைசேரி பிணை 2023 செப்டம்பர் 14 ஆம் திகதி புதிய திறைசேரி பிணைமுறியாக மாற்றப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |
| (iii) | அ.டொலர் 788,237,384 பெறுமதியான இலங்கை அபிவிருத்தி பிணைமுறி 2023 ஆகஸ்ட் 15 ஆம் திகதி திறைசேரி பிணைமுறியாக மாற்றப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |
| (iv) | அரசாங்கத்தின் உள்நாட்டு சட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட அந்நிய செலாவணி வங்கிகளுக்குரிய மக்கள் வங்கியில் இருந்து பெறப்பட்ட அ.டொலர் 85,943,611 கடன் தொகை 2023 நவம்பர் 11 ஆம் திகதி திறைசேரி பிணை முறியாக மாற்றப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| (v) | மேலும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் கீழ் இலங்கை வங்கியில் இருந்து பெற்பபட்ட அ.டொலர் 240 மில்லியன் அந்நிய செலாவணி வங்கி பிரிவு கடன் மீள் கட்டமைப்பதற்காக 2023 நவம்பர் 02 ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |
| (ஐ) | 2023 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் மூலம் எந்தவொரு நிதிஏற்பாடும் பெற்றுக்கொள்ளாமல் 2022 மார்ச் 31 ஆம் திகதி முதல் 2022 யூலை 22 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் நாட்டில் நடைபெற்ற நெருக்கடியான நிலைமையின் காரணமாக பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட ஆதனங்களுக்கு ஏற்பட்ட இழப்பீடு தொடர்பாக 2022 இன் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டு சட்டத்தின் 6(1) பிரிவில் குறிப்பிடப்பட்ட குறைநிரப்பு உதவி சேவை மற்றும் அவசர சந்தர்ப்ப பொறுப்புக்கள் செலவின தலைப்பின் மூலம் செலவின தலைப்பு 130 அரசாங்க பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு கிடைத்த குறைநிரப்பு பாதீட்டு மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டை பயன்படுத்தி 41 பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ரூபா 1,050,339,626 தொகை மீளாய்வாண்டில் இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அமப இலக்கம் 23/0732/601/010-III என்ற 2023.04.24 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அதிகார இலக்கம் 186 மற்றும் 2023.05.09 ஆம் திகதிய கடிதம் மூலம் ரூபா 714 மில்லியன் விநியோகிக்கப்பட்டிருந்தது. மேலும் அ.ம.ப இலக்கம் 23/1683/605/035-I என்ற 2023.09.11 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இழப்பீடுகளை மீளளிப்புச் செய்வதற்காக எதிர்காலத்திக் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக செலுத்துவதற்கு ரூபா 700 மில்லியன் மேலதிக நிதியேற்பாடு வழங்குமாறு திறைசேரி செயலாளருக்கு பணிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உள்ளபடியான தேவையின் அடிப்படையில் அதிகார இலக்கம் 341 இன் மூலம் 2023.10.04 ஆம் திகதிய கடிதத்தின் ஊடாக ரூபா 300 மில்லியன் மேலதிக நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 130-01-12-002-1508 செலவின விடயத்திற்காக ரூபா 42 மில்லியன் மற்றும் ரூபா 24 மில்லியன் தொகைகள் நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் முறையே 2023.12.12 ஆந் திகதி மற்றும் | மதிப்பீடு செய்யப்பட்ட இழப்பீட்டை முழுமையாக இனங்கண்டு வருடாந்த மதிப்பீட்டின் மூலம் நிதியேற்பாட்டை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 2023.12.28 ஆந் திகதிகளில் மாற்றப்பட்டிருந்தது.<br><br>அதன் பிரகாரம் ரூபா 1,080 மில்லியன் நிதியேற்பாடு இந்த செலவினங்களை செய்வதற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,056 மில்லியன் செலவிடப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் இந்த குறைநிரப்பு நிதியேற்பாடு வழங்குதல் தொடர்பாக 2023 ஆம் ஆண்டிற்குரிய ஒதுக்கீட்டு சட்டத்தின் 6(i) ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு உரைத்த பிரகாரம் அறிக்கையிடப்பட்டுள்ளது. | |
| (ஒ) | பொது முயற்சிகளை மீள் கட்டமைப்பதற்குரிய நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் பொது முயற்சிகள் மீள் கட்டமைப்பு அலகொன்று ஸ்தாபித்து 2022 திசெம்பர் 01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பொது முயற்சிகளை மீள்கட்டமைப்பதற்குரியதாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது. | | |
| (i) | அரசாங்கத்திற்கு சொந்தமான பொது முயற்சிகள் மறுசீரப்பு கொள்கையின் 02 ஆவது மூலதத்துவங்களில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் நிர்வாக கம்பனியை ஸ்தாபித்தல் மற்றும் 2023 மே 15 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்ட இலக்கம் MF/036/CM/2023/107 மற்றும் 2023 மே 08 ஆம் திகதிய அமைச்சரவை குறிப்பில் 4.2 மற்றும் 4.3 பந்தியின் பிரகாரம் அமைச்சரவை குறிப்பு இணைப்பு 02 மற்றும் 03 இல் பட்டியல் இடப்பட்டுள்ள 72 நிறுவனங்களை மீள் கட்டமைப்பதற்காக பிடிப்புக் கம்பனி (HOCO) இற்கு அதன் ஒன்றிணைந்த கம்பனியாக கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் | பிடிப்புக் கம்பனி ஒன்றை ஸ்தாபித்தல் பொது முயற்சிகள் மறுசீரமைப்புச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டு அதனை ஆரம்பித்தல் பொருத்தமாக இருந்ததாக அரசாங்கத்தின் கொள்கையாக இருந்தமையால் மேற்கூறப்பட்ட முன்மொழிவுகள் இதுவரையிலும் அமுல்படுத்தப்படவில்லை. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீள் கட்டமைப்பதற்கான கட்டுப்பாட்டு கம்பனி (HOCO) ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | மேலும், அந்த பிடிப்புக் கம்பனிக்கு (HOCO) கையளித்து மீள் கட்டமைப்பதற்கு மேற்கூறப்பட்ட குறிப்பில் இணைப்பு 02 பட்டியலில் குறிப்பிடப்பட்ட 08 நிறுவனங்களில் 07 நிறுவனங்கள் தற்போது வரையில் கட்டுப்பாட்டு கம்பனிக்கு கையளிக்காமல் பொது முயற்சிகளை மீள் கட்டமைப்பின் கீழ் அரசாங்கத்திற்குரிய பங்குகளை அகற்றும் (Divesting) செயற்பாடுகளுக்காக கொடுக்கல் வாங்கல் ஆலோசனையாளரை தெரிவு செய்து கேள்வி கோரும் செயற்பாடுகளில் சில கட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தமையும், அதன் கீழ் உள்ள ஒரு நிறுவனம் சட்டமா அதிபரின் ஆலோசனையின் அடிப்படையில் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | இதன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள 08 நிறுவனங்களுக்கு இடையே 07 நிறுவனங்கள் தற்போது பொது முயற்சிகள் மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், அரசாங்கத்திற்குச் சொந்தமான பங்குகளை நீக்குவதற்கு (Divestiture) கொடுக்கல் வாங்கல்கள் ஆலோசனையாளர்களை சேர்த்து கேள்வி கோரும் செயற்பாடுகள் சில கட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக அரசாங்கத்தின் முன்னுரிமையின் பிரகாரம் 2023.03.13 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது இலக்கம் 23/0431/604/046 என்ற அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் இந்த பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் Water Edge நிறுவனம் சட்டமாதிபரின் ஆலோசனையின் அடிப்படையில் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. | மேற்படி |
| (ஓ) | திறைசேரி செயற்பாட்டு நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக ஒன்றிணைந்த மென்பொருள் முறைமையொன்று நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சிற்காக ஒன்றிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையொன்று (ITMIS) அறிமுகப்படுத்துதல் 2010 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ஒட்டுமொத்த முதலீட்டில் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 7,920 மில்லியனுக்கு சமமான அ.டொலர் 60 மில்லியன் ஆகும். 2023 திசெம்பர் 31 | ITMIS அறிமுகப்படுத்துதல் 2010 ஆம் ஆண்டு முதல் நிதி முகாமைத்துவ செயற்திறன் செயற்திட்டம் (FMEP) மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த முறைமையின் பிரதான செயற்பாட்டுத் துறைகளை விரிவுபடுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டின் யூலை மாதம் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதுவரையில் முறைமையில் பாதீடுகளைத் திட்டமிடல் மற்றும் பாதீட்டு | தற்போதும் பின்னடைவிற்கு உட்பட்டுள்ளமையால் முறைமையினை விரைவாக முழுமையாக அபிவிருத்தி செய்து அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் திகதி வரையில் அண்ணளவாக 13 வருட காலம் கடந்திருந்ததுடன், கணக்காய்விற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ரூபா 5,647 மில்லியன் செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும், இந்த முறைமை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஆரம்ப பிரதான செயற்பாடுகளில் 13 துறைகளை முழுமையாக அபிவிருத்தி செய்து அமுல்படுத்தும் நிலைமைக்கு உட்படுத்தியிருக்கவில்லை. எனினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ITMIS முறைமை தொடர்பாக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 43,887,382 மற்றும் அ.டொலர் 989,103 தொகையும் உரிய கம்பனிக்கு செலுத்த வேண்டியதாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | ஒதுக்கீடுகளுக்குரிய செயற்பாடுகளை விரிவுபடுத்துதல் FMEP செயற்திட்டம் மூலம் முழுமையாக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் ஏற்பட்ட நிலைமை 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் COVID தொற்றுநோய் பரவலடைந்ததன் காரணமாக ஊரடங்குச் சட்டம் விதித்தல் மற்றும் நாடு மூடப்பட்ட நிலைமை மற்றும் 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக ITMIS முறைமை விரிவுபடுத்தும் நடவடிக்கைகள் உரிய பிரகாரம் மேற்கொண்டு செல்வதற்காக இடையூறாக இருந்தது. 2023 ஆம் ஆண்டில் முதல் அரை பகுதியில் அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்ட மதிப்பீட்டு நடவடிக்கைகளின் காரணமாக முறைமையில் பரவலாக்கல் மேற்கொள்ள முடியாதிருந்தது. அதன் பிரகாரம் 04 வருட அளவிலான காலம் ITMIS முறைமையினை விரிவுபடுத்துதல் உரிய பிரகாரம் மேற்கொள்ள முடியாதிருந்தது. | |
| (ஔ) | மேலும் இந்த ITMIS ஆரம்பத்தில் இருந்து அது அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட சம்பள முகாமைத்துவ செயற்பாட்டு துறைகள் ஸ்தாபித்து அமுல்படுத்தாமல் 2016 ஆம் ஆண்டின் போது e-Payroll பெயருடைய ஏனைய சம்பள முகாமைத்துவ முறைமையொன்று நிதி அமைச்சுக்கு மாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக 2023 திசெம்பர் 31 ஆம் | 2016 ஆம் ஆண்டு வரையில் மொத்த அரச துறைக்காகவும் சம்பள முகாமைத்துவ செயற்பாட்டு முறைமை ஒன்றின் தேவை நிதி அமைச்சின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட ITMIS முறைமை மூலம் நிதி அமைச்சிற்காக மாத்திரம் அறிமுகப்படுத்துவதற்கு | பொருளாதார நிலைமை மற்றும் செயற்திறன் தன்மை தொடர்பாக விசேட கவனம் செலுத்தி மொத்த அரச துறைக்காகவும் சம்பள முகாமைத்துவ முறைமை ஒன்றை அமுல்படுத்துவதை விரைவுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதி வரையில் ரூபா 5,704,871 செலவினம் செய்யப்பட்டிருந்தது. | இருந்த சம்பள முகாமைத்துவ செயற்பாடுகள் வரையறையுடனாக இருந்ததுடன் அது மொத்த அரச துறைக்காகவும் ஈடுபடுத்துவதற்கு பொருத்தம் இல்லாமல் இருந்தது. மேலும் அவ்வாறான சிக்கல்களுடன் அந்த செயற்பாடுகள் ITMIS முறைமை மூலம் பரவலாக்குதல் பொருளாதார ரீதியில் பாதகமானதாக இருந்தது. அதனால் 2016 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் நடைபெற்ற அமைச்சரவை கொள்கை கூட்டத்தின் போது மொத்த அரச துறைகளுக்காகவும் சம்பள முகாமைத்துவத்தற்காக தனிப்பட்ட மென்பொருள் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் e-payroll சம்பள முகாமைத்துவ முறைமை தற்போது அமுல்படுத்தப்படுகின்றது. | |
| (க) | 2023 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 05 வெளிநாட்டு மானியம் (பணமாக பெற்றவை) இன் கீழ் மீளாய்வாண்டில் வெளிநாட்டு மானிய செலவினத்தின் கூட்டு மொத்தம் ரூபா 5,333 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், உரிய வைப்பு பேரேட்டின் பிரகாரம் அந்த செலவினங்களின் கூட்டுமொத்தம் ரூபா 5,302 மில்லியன் ஆகும். | வெளிநாட்டு மானியமாக கிடைத்த பணத்தை பொறுப்பு தன்மை மற்றும் கணக்கீட்டு நடவடிக்கைகள் மாத்திரம் வெளிநாட்டு வளங்கல் திணைக்களத்திற்கு உரியதாக இருந்ததுடன் உரிய மானிய செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் அரசாங்கத்தின் அமைச்சுக்கள் / திணைக்களங்கள் ஆனமையால் அந்த பணத்தை குறித்துரைத்த நோக்கங்களுக்கு பயன்படுத்துதல் உரிய அமைச்சு / திணைக்களங்களின் பொறுப்பாகும். | வழங்குனரின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் பெறப்பட்ட வெளிநாட்டு மானியங்கள் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்துதல் தொடர்பாக இணைப்பை ஏற்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதலை வழிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கா) | 2023 சனவரி 01 ஆந் திகதி வரையில் இலங்கை அரசாங்கத்திற்கு வெளிநாட்டு மானியமாக கிடைத்திருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்ட வெளிநாட்டு மானியங்களின் பெறுமதி ரூபா 107.6 மில்லியன் ஆகும். | தற்போது வரையில் 02 வைப்புக் கணக்குகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 11,049,841 செயற்பாடற்ற மீதியாக இனங்காணப்பட்டு உரிய அமைச்சு மற்றும் நிறுவனத்தின் பரிந்துரையின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரூபா 57,696,383 ஆன வைப்பு மீதி ஒன்று உள்ள கணக்கு தொடர்பாக இந்த திணைக்களத்தால் உரிய அமைச்சிற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் கட்டுநிதி விடுவித்துக் கொள்வதற்காக உரிய அமைச்சின் மூலம் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் பாதீட்டு நிதியேற்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. உரிய நிதியேற்பாடு வழங்கியதன் பின்னர் கட்டுநிதி விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதன் பிரகாரம் இந்த வைப்புக் கணக்கின் கீழ் குறித்துரைத்த தொகையை எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும் மிகுதியாகவுள்ள 07 வைப்பு கணக்குகளுக்கு உரியதாகக் காணப்படுகின்ற ரூபா 38,863,894 ஆன வைப்புத் தொகை உரிய விடயத்திற்கு பயன்படுத்துமாறு உரிய நிறுவனங்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| (கி) | 2023 திசெம்பர் 31 திகதி சமர்ப்பிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர் முற்பணக் கணக்கிற்கான (8493) காலப் பகுப்பாய்வு அட்டவணை பிரகாரம், மாகாணசபைகளுக்கு இடமாறிச் சென்ற உத்தியோகத்தர், கூட்டுத்தாபனம், சபைகள் மற்றும் மாகாணசபைக்கு நிறந்தரமாக விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர், மரணித்த உத்தியோகத்தர், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், கடமை தடைவிதித்த உத்தியோகத்தர், கடமையை விட்டுச் சென்ற/ முடிவுறுத்திய உத்தியோகத்தர் இரட்டை அடிப்படையில் இடமாற்றம், வெளிநாடு சென்ற/ உள்நாட்டு விடுமுறை பெற்ற மற்றும் ஏனைய வகையின் கீழான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 05 ஆண்டுகள் மற்றும் 10 ஆண்டுகளிற்கிடையிலான கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 112,939,218 ஆக இருந்ததுடன் 10 ஆண்டுகளை விஞ்சிய மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 277,066,082 ஆக இருந்தது. | இந்த கடன் மீதி தாபனவிதிக் கோவை, நிதிப்பிரமாணம் மற்றும் காணப்படுகின்ற சுற்றறிக்கை ஏற்பாடுகளை பின்பற்றி தீர்த்து வைத்தல் அந்தந்த நிறுவனங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். காலாண்டு ரீதியில் அந்த நிறுவனங்களின் செயல் முன்னேற்றத்தைப் பெற்று கடன் மீதிகளை அறவிடும் செயல்முன்னேற்றத்தை பரீட்சிப்பதுடன் தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கி தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | மீதகளைத் தீர்த்து வைப்பதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்து காணப்படுகின்ற முறைமையை விருத்தி செய்தல் வேண்டும். |
| (கீ) | 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 17 அரசாங்க தொழில் முயற்சிகளுக்குரிய நடைமுறை விகிதம் நலிவான நிலையில் காணப்பட்டது. விசேடமாக இலங்கை விமான கம்பனியின் நடைமுறை விகிதம் 0.15 ஆன மிகவும் குறைந்த பெறுமதியை கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இந்த அரசாங்க இந்த பொதுமுயற்சிகளின் திரவத் தன்மை கஸ்டமான நிலைமைக்கு முகங்கொடுத்தல் கூடிய ஆபத்துடன் உள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது. | பொது திறைசேரிக்கு சொந்தமான பொது முயற்சிகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்காக காணப்படுகின்ற நிதி வலு மிகவும் வரையறைக்கு உட்பட்டதாகும் அவ்வாறான சந்தர்ப்பத்தின் போது பொது முயற்சிகளுக்கு தமது தொழிற்படு மூலதன தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்கு வங்கி மூலங்களுக்கு நுழைய வேண்டி ஏற்படுகின்றது. அதன் பிரகாரம் வங்கிகளுக்கு தீர்த்து வைக்கப்பட வேண்டிய கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி உயர்வடைந்து சென்றதன் அடிப்படையில் நடைமுறைப் பொறுப்புக்களும் நடைமுறைச் சொத்துக்களுடன் ஒப்பிடும் போது உயர் பெறுமதியைக் | அரசாங்கத்தின் உரிமைத் தன்மையில் உள்ள நிறுவனங்களில் நிதி நிலைமைகளை கால ரீதியில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி தேவையான உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும், அவ்வாறே பெறுமதிகள் குறைவடைதல் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் உரிய பிரகாரம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

கொண்டிருந்தது. அதன் மூலம் உரிய பொதுத்துறை பொது முயற்சிகளில் குறுங்கால பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பதற்காக திரவத் தன்மையான சொத்துக்களின் அளவு போதியளவில் இல்லாத மட்டத்தில் காணப்பட்டது. எனினும் இலங்கை விமான கம்பனிக்கு அதன் பொறுப்புக்களை தொடர்ந்தும் செலுத்த வேண்டி முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டமையால் உடனடியாக முதலீட்டினைக் கவரும் வகையில் ஐ.அ.டொலர் 210 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 100 மில்லியன் ஆன பொறுப்புக்கள் அரசாங்கத்திற்கு கையளிப்பதன் மூலம் அது ஐந்தொகையில் மீள்கட்டமைக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (கு) | 2022 ஆம் ஆண்டின் இறுதி வரை 16 பொது முயற்சி தொடர்பாக மிகை மூலதன நிலைமை அவதானிக்கப்பட்டது. இதில் சில நிறுவனங்களில் அரசாங்கத்தின் மூலதனத்தை விட செலுத்துவதற்குள்ள நீண்டகால கடன் உயர்ந்த பெறுமதியை கொண்டிருந்தது. மேலும் அரசாங்கத்தின் மூலதன பங்களிப்பு மறை பெறுமதியாக கொண்டுள்ள பொது முயற்சிகளும் அவதானிக்கப்பட்டுள்ளதுடன் அந்த நிறுவனங்கள் முழுமையாக நீண்ட கால கடனின் மூலம் நிதியேற்றம் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த சகல நிறுவனங்களும் உயர்ந்த ஆகக் கூடிய நிதி ஆபத்திற்கு (Financial Risk) தொடர்ச்சியாக காணப்பட்டமை தொடர்பாக அதிக ஆபத்திற்கு முகங்கொடுத்து இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | இந்த பொது முயற்சிகள் தமது செயற்பாட்டு நடவடிக்கைகளில் பேணிச் செல்வதற்காக தேவையான தொழிற்படு மூலதனம் வங்கிகளின் மூலம் பெறப்பட்ட நீண்ட கால கடன் மூலம் நிதியீட்டம் செய்யப்பட்டதன் காரணமாக சிக்கலான நிலைமைக்கு முகங்கொடுத்திருந்தது. சில பொது முயற்சிகளுக்கு அரச வங்கிக் கடன் குறித்துரைத்த கால எல்லையில் சேவையிடல்கள் மேற்கொள்வதற்கும் தவறியதன் மூலம் கடன் உரிமையாளர்களின் இணக்கப்பாட்டில் கடன் மீள்கட்டமைப்பதற்கு செல்ல வேண்டி ஏற்பட்டிருந்தது. அரசாங்கத்திற்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட நிதித் தேவையின் இடையே பொது | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | | முயற்சிகள் காணப்படுகின்ற மூலதன கஸ்டங்களுக்காக நிதி ரீதியான சலுகையினை வழங்குதல் வசதியீனமாக இருந்த போதும் 2023 ஆம் ஆண்டின் போது எடுக்கப்பட்ட மறுசீரமைப்பின் மூலம் தொழில் முயற்சிகளில் காணப்பட்ட சிக்கலான நிலைமையினால் அது ஏற்பட்டிருந்தது. | |
| (கூ) | அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் அரசாங்கத்திற்கு சொந்தமான வியாபாரங்களில் மூலனப் பங்களிப்பின் அதிகரிப்பு ரூபா 269,386 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 34,090 மில்லியன் அதாவது 13 சதவீதம் ஒவ்வொரு நிறுவனங்களினதும் நடைமுறை வடிவத்தில் அதாவது கடன் மற்றும் கடன் வட்டி செலுத்துதல் மற்றும் சம்பளம் மற்றும் வேதனங்களை செலுத்துவதற்காக பொதுத் திறைசேரியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகைகளை உள்ளடக்கி இருந்தது. | இந்த நிறுவனங்கள் யாவற்றினதும் முழுமையான உரித்து பொதுத் திறைசேரிக்கு உரியதாகும். அதன் பிரகாரம் இந்த நிறுவனங்களில் காணப்படுகின்ற தொழில்படு மூலதனப் பிரச்சனை அல்லது ஏனைய மீண்டெழும் வடிவில் உள்ள செலவினங்களுக்காக தேவையான நிதிப் பங்களிப்பு பொதுத் திறைசேரியினால் வழங்கப்படல் வேண்டும். | மீண்டெழும் வடிவில் உள்ள செலவினங்களைச் செய்வதன் மூலம் நிறுவனங்களின் மூலதன பங்களிப்பை அதிகரிக்காதிருந்தமையால் அதற்காக உரிய திட்ட முறைமை ஒன்று பின்பற்றப்படல் வேண்டும். |
| (கெ) | அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் அரசாங்கத்திற்கு சொந்தமான 05 பொது முயற்சிகளுக்காக ரூபா 176 மில்லியன் மூலதன பங்களிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக திறைசேரிக்கு உரித்தான பங்குகளின் எண்ணிக்கையில் மாற்றம் அடைந்திருக்கவில்லை. | அரசாங்கக் கம்பனியில் மேற்கொள்ளப்படுகின்ற மூலதனப் பங்களிப்பு பிரதான பேரேட்டுக் கணக்கில் அறிக்கையிடுவதற்காக முன்னர் காணப்பட்ட முறைமையில் உரிய கம்பனியால் பங்குச் சான்றிதழ் விநியோகித்தல் கம்பனியால் பங்கு சான்றிதழ் விநியோகிக்கும் செயற்பாடுகளுக்காக கவனத்தில் கொள்ளக்கூடிய காலம் ஒன்றாக இருந்தமையால் பங்குச் சான்றிதழ் விநியோகிக்கும் வரையில் காத்திருக்காமல் உரிய மூலதன பங்களிப்பு மேற்கொள்ளப்பட்ட உடன் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பங்குகளில் முதலீடுகளுக்குரிய பங்குச் சான்றிதழை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கே) | மிஹின் லங்கா (தனியார்) கம்பனி கலைத்தல் தொடர்பாக இலக்கம் MOF/DG/LAD/CO/142/2017 மற்றும் 2017 ஒக்டோபர் 30 ஆம் திகதிய அமைச்சரவை குறிப்பில் முன்மொழிவு இலக்கம் (அ), (ஆ) மற்றும் (இ) இற்கான இலக்கம் அமப/17/2383/733/026-1 மற்றும் 2017 நவம்பர் 08 ஆம் திகதிய அசைச்சரவை தீர்மானத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திறைசேரி செயலாளரால் கம்பனியை கலைப்பதற்காக விஷேட முன்மொழிவொன்று அங்கீகரிக்கப்பட்டு வணிக நீதிமன்றத்தில் இருந்து கிடைத்த கோரிக்கையின் படி 2018 மார்ச் 18 ஆம் திகதி கலைப்பாளர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட நிலைமையின் போது மக்கள் வங்கியிலிருந்து அந்த நிறுவனம் பெற்ற கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி செலுத்துவதற்காக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 272 மில்லியன் மற்றும் ரூபா 441 மில்லியன் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 713 மில்லியன் ஆன மூலதன பங்களிப்பொன்று மீளாய்வாண்டின் போது பொதுத் திறைசேரியில் இருந்து வழங்கப்பட்டிருந்தது. | மிஹின் லங்கா (தனியார்) கம்பனிக்கு 2021 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட மூலதனப் பங்களிப்பு அந்த ஆண்டுகளின் போது உரிய பிரதான பேரேட்டுக் கணக்கில் அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. மூலதன பங்களிப்பு மேற்கொள்ளப்பட்ட ஆண்டின் போது பங்குச் சான்றிதழ் பத்திரம் விநியோகிக்கப்படாத சந்தர்பங்களும் காணப்பட்டமையால் உரிய கணக்கீட்டு நடவடிக்கைகளும் தாமதமாகி மேற்கொள்ளப்பட்டது. அதனால் அவ்வாறான தவறுகளைத் தடுப்பதற்காக அரசாங்கக் கணக்குகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி பங்குச் சான்றிதழ் உரிய குறிப்பில் பிரதான பேரேட்டுக் கணக்கிலும் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதியத்தை வழங்கும் போது அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய பாதகமான நிலைமையினைக் குறைக்கும் வகையில் காணப்படுகின்ற நிலைமையில் முறையான மதிப்பீட்டுடன் மேற்கொள்ளல் வேண்டும். |
| (கை) | மீளாய்வாண்டின் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் கணக்கு குறிப்பு 15 இன் கீழ் இலங்கை டொலிகொம் நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை குறிப்பிடப்படாதிருந்ததுடன், பெறுமதி ரூபா 1,271,480,516 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், இலங்கை டொலிகொம் நிறுவனத்தில் இருந்து கிடைத்த மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமான இலங்கை டொலிகொம் நிறுவனத்தின் பங்கு உரிமை 50.23 சதவீதம் ஆக இருந்த போதும், அரசாங்கத்தின் நிதி கூற்றுக்களில் அது 49.5 சதவீதமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | தற்போது வரையில் இந்த பங்கு மூதலீடு தொடர்பான பங்குச் சான்றிதழ் கிடைத்திருக்கவில்லை. தவறினால் உரிய பங்கு பெறுமதி குறிப்பிடப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் அந்தப் பெறுமதியும் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். உரிய சதவீதத்தை கணிப்பீடு செய்யும் போது ஏற்பட்ட கணிப்பீட்டு வழுவின் காரணமாக இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்ததுடன் அதனை எதிர்காலத்தில் சரி செய்து கொள்வதற்காக குறிப்பிடுகின்றோம். | அரசாங்கத்தின் உரிமையில் காணப்படுகின்ற நிறுவனங்களுடன் காலரீதியில் மீதிகளை உறுதிப்படுத்தி பெற்று கணக்குகளில் சரியாக உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கொ) | அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முயற்சிகளில் மூலதன பங்களிப்பின் அதிகரிப்பு ரூபா 269,386 மில்லியன் ஆக இருந்ததுடன், அதில் ரூபா 228,771 மில்லியன் அதாவது 85 சதவீதம் 2023 செப்டம்பர் 26 ஆம் திகதிய அமப 23/1812/604/118-1 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் கீழ் இலங்கை மின்சார சபை மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை விமான கம்பனியின் ஐந்தொகையில் மீள் கட்டமைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட உரிமை மூலதன முதலீட்டின் காரணமாக அதிகரித்திருந்தது. | இணங்குகின்றோம்.<br>குறிப்பிட்டுக்கொள்கின்றோம். | அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளை இனங்கண்டு பொறுப்புக்கள் அரசாங்கத்திற்கு கையேற்றதன் காரணமாக அரசாங்கம் நிதி நெருக்கடிக்கு தாக்கமளித்திருந்தமையினால் அந்தப் பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பதற்கு உரிய திட்ட முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |
| (கோ) | 2019 சனவரி 01 ஆம் திகதி முதல் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை வெளிநாட்டு மானியங்களை பெற்றுக் கொள்வதற்காக திறைசேரியினால் ஒவ்வொரு வெளிநாட்டு மானிய நிறுவனங்கள் 13 நிறுவனங்களுடன் கூட்டுப் பெறுமதி ஜப்பான் யென் 984,000, யூரோ 134,810,000, அ.டொலர் 58,417,841, கொரியன் வொன் 400,000, சீன யுவான் 2,000,000,000 மற்றும் ரூபா 4,545,750 ஆக பல்வேறு நாணயங்களில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த வெளிநாட்டு மானியங்கள் கிடைத்திருந்தமைக்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்ட போதும் வெளிநாட்டு மானியம் கிடைக்கப் பெறாத உடன்படிக்கையின் மூலம் தற்போது பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அவற்றை அறிக்கையிடுவதற்காக மானியம் வழங்கிய நாடு / நிறுவனத்தால் புதிய தகவல்கள் இந்த திணைக்களத்திற்கு வழங்கப்படாதிருந்த மானியங்கள் ஆகும். மேலும்<br><br>• 2022209 மற்றும் 2023209 – ஜப்பான் , ஜப்பான் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த உதவி மானியம் இரண்டையும் பெற்றுக் கொள்வதற்காக ஜப்பான் அரசுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இந்த உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக தேவையான | இலங்கை அரசாங்கத்தினால் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்படுகின்ற வெளிநாட்டு மானியங்களை முழுமையாக பெற்று உச்ச அளவில் நோக்கங்களுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நடவடிக்கைகள் பெறுகை முகவரினால் மேற்கொள்ளப்பட்டதுடன் (1) செயற்திட்டத்தின் உபகரணப் பகுதி இந்த ஆண்டிலும் மிகுதியை வருகின்ற ஆண்டிலும் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (3) செயற்திட்டத்தின் கீழ் ஆன உபகரணங்கள் எதிர்வரும் இரண்டு வருடங்களில் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- 2023207 – ஜப்பான், இது ஜப்பான் அரசினால் மனித அபிவிருத்தி புலமை பரிசில் (JDS) ஜப்பான் உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலற்கைக்கான நீண்ட கால புலமை பரிசில் வழங்குதலாகும். அதன் முதல் கட்டம் இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் தற்போது புலமை பரிசிலுக்காக உத்தியோகத்தர்கள் தெரிவு செய்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அவர்கள் 2024 ஆகஸ்ட் மாதத்தில் ஜப்பானின் பல்கலைக்கழகத்தில் கல்விக்காக அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- 2019241 – நெதர்லாந்து, இந்த செயற்திட்டத்திற்காக உடன்படிக்கை கைச்சாத்திடல் 2019 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதன் பின்னர்

எழுந்திருந்த நிலைமையின் காரணமாக 2021 ஆம் ஆண்டின் யூலை மாதம் வரை செயல்திட்டத்தை அமுல்படுத்தல் தாமதம் அடைந்திருந்தது. அது 2025 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- 20190211 – ஜேர்மன், இது மகமோதர தாய் சேய் வைத்தியசாலை நிர்மானிக்கும் செயற்திட்டத்திற்காக ஜேர்மன் அரசு வழங்கிய நிதி உதவி ஆகும். இந்த செயற்திட்டம் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நிர்மாண காலத்தை நீடிக்க வேண்டி ஏற்பட்ட செயற்திட்டம் ஒன்றாகும்.

- ஜேர்மன், ஐரோப்பா சங்கம், ஐரோப்பிய சமூகம், அமெரிக்க ஐக்கிய குடியரசின் கீழ் வழங்கப்படுகின்ற மானியங்களுக்காக நிதி அமைச்சின் ERD/AE/GEN/16 மற்றும் 2020.10.02 ஆம் திகதிய "Streamlining the Fund Channeling Mechanism and Implementation Modalities of Grant Funded Projects" சுற்றறிக்கையின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற ஆலோசனைக் கோவையின் பிரகாரம் மேற்பார்வை மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்வதற்காக தேவையான

தகவல்களை வழங்குதல் உரிய செயற்திட்டத்தை அமுல்படுத்துகின்ற அமைச்சு அல்லது நிறுவனங்களால் நிறைவேற்ற வேண்டிய பணி ஆகும். இந்த செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது செலவின அறிக்கை கிடைக்காமையின் அடிப்படையில் வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்தின் தரவு முறைமையில் பயன்படுத்தப்பட்ட அளவு உள்ளடக்கப்படவில்லை.

- 2021212 – ஆசிய அபிவிருத்தி வங்கி செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது ஏற்பட்ட தாமதத்தால் அமுல்படுத்தப்படவில்லை .

- 2021211 – IFAD, இந்த மானியம் தொகையில் மேற்கொள்ளப்பட்டிருந்த பணிகள் தொழில் நுட்ப கற்கை செயற்திட்ட முகாமைத்துவ அலகின் மூலம் மேற்கொள்ளப்பட்டமையால் இந்தத் தொகை செலவினத்தின் செலவிடுவதற்கான தேவை ஒன்று காணப்படவில்லை.

- 20190206 – யுனெஸ்கோ, இதன் தகவல் இந்தத் திணைக்களத்தில் அறிக்கையிடப்பட வில்லை.

| | | | |
|---|---|---|---|
| (கௌ) | கடன் கொடுப்பனவுகள் தற்காலிகமாக கைவிடப்பட்டதன் காரணமாக 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி முதல் மேற்கூறப்பட்ட கடன் உடன்படிக்கைகளுக்குரிய பயன்படுத்தப்படாத மீதியின் அடிப்படையில் அர்ப்பணித்தல் கட்டணம் (Commitment Fee) செலுத்தப்படாதிருந்தமை கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்ட போதிலும், எதிர்காலத்தில் இந்த கடன் தொகைகளுக்குரிய பயன்படுத்தப்படாத மீதியின் அடிப்படையில் சராசரி அர்ப்பணித்தல் கட்டண பெறுமதி அல்லது கொடுப்பனவு தாமதத்தின் காரணமாக அப்பெறுமதியினை விட உயர்ந்த பெறுமதி செலுத்த வேண்டி ஏற்படும் ஆபத்து காணப்படுகின்றமை கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது. | இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட சில கடன் கொடுப்பனவுகளை கைவிடல்கள் பின்னபற்றப்பட்ட இடைக்கால கொள்கைகளுக்கு இணங்க தாக்கத்திற்குட்பட்ட வெளிநாட்டு கடன் சேவையிடல் 2022 ஆகஸ்ட் 12 ஆம் திகதி முதல் இடைக்கால ரீதியில் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செலுத்தப்படாத கடப்பாட்டுக் கட்டணம் மற்றும் தண்ட வட்டிகள் கடன் மீதி தொடர்பாக கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளுக்குரிய குழு கூட்டத்தின் போது கலந்துரையாடலுக்கு உட்படுத்த முடியுமாக இருந்ததுடன் அது தொடர்பாக இதுவரை ஆலோசனை கிடைத்திருக்கவில்லை. | கடன் செலுத்துவதை கைவிடுவதற்கு உரியதாக எழக்கூடிய மேலதிக செலவினங்களை முன்கூட்டியே இனங்கண்டு உரிய மூலோபாயத் தீர்வுகள் வழங்குதல் வேண்டும். |

## 4. நிதி மீளாய்வு

### 4.1 வருமானங்களை மதிப்பீடு செய்தல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆண்டில் மொத்த தேசிய உற்பத்தி ரூபா 27,630 பில்லியன் ஆக இருந்ததுடன், 2022 ஆண்டில் மொத்த தேசிய உற்பத்தி ரூபா 24,063 பில்லியன் ஆக இருந்தது. அதன் பிரகாரம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த தேசிய உற்பத்தி ரூபா 3,567 பில்லியனால் அதாவது 14.82 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | தனியார் வருமான வரி கட்டமைப்பை திருத்துதல், ஸ்தாபிக்கப்பட்ட வரி விகிதத்தை அதிகரித்தல் மற்றும் ஒவ்வொரு துறைகளுக்காகவும் வழங்கப்பட்டிருந்த விடுவித்தல்களை நீக்குதல், 2022 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பெறுமதி சேர் வரியின் அடிப்படையில் வரி விகிதத்தை திருத்துதல், சுங்க தீர்வை விகிதத்தைத் திருத்துதல், உற்பத்தி வரி விகிதத்தைத் திருத்துதல், விற்பனை மற்றும் கட்டணங்களில் இருந்து கிடைத்த | வருமானங்களை சரியாக மதிப்பீடு செய்து மதிப்பீடு தயாரித்தல், அவற்றை திருத்தும் போது பாதீட்டுப் பற்றாக்குறையினை நிதியீட்டம் செய்ய வேண்டிய முறை தொடர்பாக கவனம் |
| (ஆ) | 2023 ஆண்டிற்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரித்த வருடாந்த பாதீட்டு ஆரம்ப மதிப்பீட்டின் பிரகாரம் அரச | | |

வருமானம் ரூபா 3,408 பில்லியனாக இருந்ததுடன், கடந்த ஆண்டில் அது ரூபா 2,084 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் கடந்த ஆண்டைவிட அரச வருமானம் ரூபா 1,324 பில்லியனால் அதாவது 64 சதவீதத்தினால் அதிகரித்து அரச பாதீட்டு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) அந்த வருமான மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு பாதீட்டு நிலுவையை மதிப்பிட்டிருந்த போதும் ஆரம்ப வருமான மதிப்பீடு வருமான மதிப்பீட்டு உத்தியோகத்தரினால் ரூபா 2,880 பில்லியனாக காட்டி ரூபா 528 பிலிலியனினால் குறைத்து திருத்தப்பட்டிருந்தது. அத் திருத்திய வருமான மதிப்பீட்டின் பிரகாரம் அரச வருமானம் மொத்த தேசிய உற்பத்தியின் 10.4 சதவீதமாக இருந்தது. வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது மொத்த தேசிய உற்பத்தியின் அதிகரிப்பு மீது கவனம் செலுத்த வேண்டியிருந்த போதும், அதன் பால் கவனம் செலுத்தாது வருமான மிகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(ஈ) அரசாங்கத்தின் நிதிகூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பாதீட்டு செயலாற்றல் மற்றும் பற்றாக்குறை நிதியீட்டக் கூற்றின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட அரசாங்கத்தின் வருமானம் ரூபா 3,079 பில்லியனான இருந்ததுடன், அது திருத்திய வருமான மதிப்பீட்டை விட ரூபா 199 பில்லியனினால் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்பித்த வருடாந்த பாதீட்டு ஆரம்ப மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 329 பில்லியனால் குறைவடைந்திருந்தது. 2012 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை கால வீச்சளவினுள் ஒவ்வொறு வருமானங்களை அதிகரித்தல் மற்றும் 2022 ஆம் ஆண்டின் இறுதி அரைப்பகுதியில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரியாக இவ்வாறாக வருமானங்களை சேகரித்தல் உயர்வடைந்தமைக்கு காரணமாக இருந்தது.

2022 ஆம் ஆண்டிக் போது ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் மூலம் அந்நியச் செலாவணி வெளிப்பாய்ச்சலைக் குறைத்துக் கொள்வதற்கு விதிக்கப்பட்ட இறக்குமதி எல்லை அனேகமான பொருட்களுக்காக ஆண்டின் இறுதி அரைப்பகுதி வரையும் காணப்பட்டமை மற்றும் அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டின் போது ஒட்டுமொத்த இறக்குமதியும் 8.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை, பணவீக்கம் எதிர்பார்க்கப்பட்ட காலத்திற்கு முன்னர் வீழ்ச்சி அடைந்தமை, வெளிநாட்டு வருமான தொகைகளுடன் ஒப்பிடும் போது ரூபாவினை வலுப்படுத்துதல், கட்டுப்பாட்டில் அல்லாத வெளிநாட்டு சந்தைகளில் ஏற்பட்டிருந்த நிலைமை போன்று நுகர்வோர் செயற்பாடுகள் ஏற்பட்ட முரண்கள் போன்ற விடயங்கள் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வருமான மதிப்பீடு 100 சதவீதத்தை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தமை அடிப்படையாக தாக்கமளித்திருந்தது.

அரச வருமானத்தை மதிப்பீடு செய்யும் போது ஒவ்வொரு வருமான மூலத்திலும் வரி மூலம் (Tax Elasticity) மற்றும் வரி நெகிழ்ச்சி மற்றும் மிதப்பு வரி (Tax Buoyancy) கொள்கை தொடர்பாக பிரதானமாக ஆய்வு

செலுத்த வேண்டி இருந்தமை மற்றும் பாராளுமன்றத்தால் பின்பற்றப்பட்ட வருமான மதிப்பீடு பாராளுமன்றம் முறையாக அங்கீகரிக்காமல் திருத்துவதற்கான இயலுமை வரையறுக்கப்படல் வேண்டும்.

ஆண்டினுள்ளும் பாராளுமன்றத்திற்கு சமர்பித்த வருமான மதிப்பீட்டில் குறிப்பிடப்படும் வருமானத்திலும் திரட்டிய வருமானத்தின் குறைவு 4.08 சதவீதம் முதல் 26.06 சதவீத வீச்சளவை கொண்டிருந்ததுடன், அக்கால வீச்சினுள் அதிகரிப்பு சதவீதம் 2021 ஆண்டின் போது அறிக்கையிடப்பட்டிருந்தது.

(உ) நிதிப் பிரமாணம் 85(2)(ஆ) பிரகாரம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வருமான மதிப்பீட்டை திருத்துவதற்காக அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்திற்கு அறிக்கையிடல் மாத்திரம் குறிப்பிடப்படுவதால், பாராளுமன்றத்தினால் அங்கீகரித்த வருமான மதிப்பீடொன்றை பாராளுமன்றத்தின் அங்கீகாரமின்றி திருத்த சந்தர்ப்பம் வழங்கியதால் வருமானம் பொருத்தமானதாக மதிப்பீடு செய்யும் பொறுப்பில் நலிவுகள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

கவனம் செலுத்தப்படுகின்றது. அவ்வாறே ஒட்டுமொத்த பொருளாதார உழைப்பு மற்றும் அதன் போக்கு பிரதானமாகக் கவனத்தில் கொள்ளப்படுகின்றது. பொருளாதார அபிவிருத்தி வேகம், பணவீக்கம், சேவையில் ஈடுபடல், தொழில் வாய்ப்பு, அந்நியச் செலாவணி வீதம், சந்தையில் கணக்குகளின் செயற்பாடுகள், மூலதனப் பாய்ச்சல், வெளிநாட்டு முதலீடு போன்ற சகல பொருளாதார முரண்களினதும் செயற்பாடுகள் தொடர்பான எண்ணக்கருக்கள் அரச வருமானத்தை மதிப்பீடு செய்யும் போது பயன்படுத்தப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக பொதுமக்களின் செலவிடல் சக்தி, கேள்வி, வழங்கல் மூலம் ஏற்படுகின்ற தாக்கங்கள், உள்நாட்டு வெளிநாட்டு சந்தைகளின் செயற்பாடுகள், அரசாங்கத்தின் குறுங்கால மற்றும் நீண்டகால பொருளாதார அபிவிருத்தி நோக்குகள், அரச நிறுவனங்களில் மேற்கொள்ளப்படுகின்ற இயலளவின் தன்மையின் தாக்கம் போன்ற எதிர்பார்க்காத முறையில் ஏற்படுகின்ற இடரான நிலைமைகளின் தாக்கம் அரச வருமான மதிப்பீட்டின் போதும் கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

அதனால் 2023 ஆம் ஆண்டில் வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எனினும் 2022 ஆம் ஆண்டின் போது ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியின் பின்னர் ஏற்பட்ட மிகவும் சிக்கலான பொருளாதார சூழலின் எதிர்வு கூறல் சவாலாக இருந்தது.

அவ்வாறே அரசாங்க நிதிக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம்

1/2015 இன் பிரகாரம் எதிர்வரும் ஆண்டிற்கான வருமான மதிப்பீடு தயாரிப்பதற்கு இணையாக காணப்பட்ட ஆண்டிற்கான திருத்தப்பட்ட வருமான மதிப்பீடையும் தயாரிக்க வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் அது திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு எதிர்வரும் ஆண்டிற்காக பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற ஒதுக்கீட்டுச் சட்டத்தின் வரைபில் உள்ளடக்கி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. விசேடமாக திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டைத் தயாரிக்கம் போது வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால் உரிய வருமானத் தலைப்பின் பிரகாரம் அனுப்பப்படுகின்ற ஆண்டிற்கான திருத்த வருமான மதிப்பீட்டைப் போன்று முன்னைய ஆண்டின் போதும் வருமானத்தின் போக்கு கவனத்தில் கொள்ளப்பட்டு ஆண்டின் ஆரம்ப சில மாதங்களின் வருமான செயலாற்றல், பொருளாதார அபிவிருத்தியை உள்ளடக்கி வெற்றிகரமான பொருளாதார அபிவிருத்தி எண்ணக்கரு மற்றும் அவற்றின் குறுங்கால நோக்கங்கள் உள்நாட்டு மற்றும் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட வெளிநாட்டு சந்தைகளின் செயற்பாடுகள் இதற்காக தாக்கமளித்திருந்த ஏனைய நிலைமைகள் தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தி திருத்தப்பட்ட மதிப்பீடு தயாரிக்கப்படுகின்றது.

## 4.2 வருமான பற்றாக்குறை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண் நிதிக்கூற்றுக்களின் பாதீட்டு செயலாற்றல் மற்றும் பற்றாக்குறை நிதியீட்டக் கூற்றின் பிரகாரம் வருமான பற்றாக்குறை ரூபா 1,650 பில்லியனாக இருந்ததுடன், கடந்த ஆண்டில் அது ரூபா | குறிப்பிட்டுக் கொள்கின்றோம். எனினும் பொருளாதார ஆய்விற்காக பயன்படுத்தப்படுகின்ற | வருமானப் பற்றாக்குறையைக் குறைத்துக் கொள்வதற்காக வருமானங்களை |

1,540 பில்லியனாக இருந்தது. 2006 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரையான கால வீச்சளவில் உச்ச வருமான பற்றாக்குறை 2023 ஆண்டில் அறிக்கையிடப்பட்டிருந்தது. அக் கால வீச்சளவில் ஒவ்வொரு ஆண்டும் திரட்டிய வருமானம் அரச மீண்டுவரும் செலவினத்தை தீர்த்துக் கொள்ள இயலாதிருந்தது. வருமான பற்றாக்குறையின் குறைந்த பெறுமதி 2007 ஆண்டில் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அது ரூபா 43 பில்லியனாக இருந்ததுடன் திரட்டிய அரச வருமானத்தில் 7.52 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. அக்காலப் பகுதியினுள் மொத்த வருமான பற்றாக்குறை ரூபா 7,969 பில்லியனாக இருந்தது. அந்த பற்றாக்குறையை தீர்த்துக் கொள்ள தேசிய மற்றும் வெளிநாட்டுக் கடன் மற்றும் வெளிநாட்டு மானியம் பெறப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் அக் கால வீச்சளவினுள் தேசிய கடன் ரூபா 28,025 பில்லினும், வெளிநாட்டு கடன் ரூபா 8,318 பில்லியனும் வெளிநாட்டு மானியம் ரூபா 271 பில்லியனும் ஆக கூட்டுத்தொகை ரூபா 36,614 பில்லியன் பெறப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஆண்டுகளிலும் அவ்வாறு பெறப்பட்ட கடன் மற்றும் மானியங்களினால் 4.44 சதவீதம் முதல் 45.59 சதவீதமான வீச்சளவினூடாக வருமான பற்றாக்குறை நிதியீட்டப்பட்டிருந்தது. பெறப்பட்டிருந்த கடன் மற்றும் மானியங்களால் முதலீடு செய்யாது மீண்டுவரும் செலவுகளை தீர்க்க 2019 ஆண்டில் 20.25 சதவீதமும், 2020 ஆண்டில் 45.59 சதவீதமும், 2021 ஆண்டில் 42.39 சதவீதமும், 2022 ஆண்டில் 30.59 சதவீதமும் மற்றும் 2023 ஆம் ஆண்டின் போது 19.65 சதவீதமும் ஆக பயன்படுத்தப்பட்டிருந்தன.

| | |
|---|---|
| வருமானம், செலவினம் மற்றும் பாதீட்டு நிலுவை பொருளாதார வகைப்படுத்தலின் பிரகாரமே தயாரிக்கப்படுகின்றது.<br><br>விசேடமாக வருமானத் தலைப்பிற்குரிய அந்தந்த ஆண்டுகளுக்குரிய பெறவேண்டிய வருமானம் குறித்துரைத்த பிரகாரம் அறவிடப்படாமை / செலவு வைக்கப்படாமை / செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டதன் காரணமாக நிலுவை வருமான அறிக்கையிடல் அரசாங்க வருமானத்தின் செயலாற்றல் தொடர்பில் தாக்கமளித்திருந்த உண்மையாகும். எனினும் இது தொடர்பாக உரிய வருமானத் தலைப்பிற்கு பொறுப்புக்களுக்காக நேரடியாக கடப்பாடுடன் உள்ள வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரைப் போன்று சகல அமைச்சுக்கள் / திணைக்களங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களும் ஏனைய கணக்கீட்டு உத்தியோகத்தர்களும் இந்த நிலுவை வருமானத்தை தொடர்ச்சியாக சேகரித்தல் தொடர்பாக நேரடியாக பொறுப்புக்களுக்கு கடப்பாடு உடையவர்களாகும். | சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை மற்றும் சிக்கனமான வகையில் செலவினங்களை மேற்கொள்ளல் வேண்டும். |

(ஆ) மீளாய்வாண்டினுள் ரூபா 2,455 பில்லியனான வட்டி செலுத்தியிருந்ததுடன் அது மொத்த மீண்டுவரும் செலவின் 51.91 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தியது. கடந்த ஆண்டில் வட்டி செலுத்தல் ரூபா 1,565 பில்லியன் அதாவது மொத்த மீண்டுவரும் செலவின் 44.22 சதவீதமாக காணப்பட்டது. வட்டி செலுத்தல் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 890 பில்லியனால் அதிகரித்திருந்தது. மேலும், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட இடைகால வெளிநாட்டு கடன் செலுத்தல் இடைநிறுத்துவதன் கொள்கைரீதியான தீர்மானம் பிரகாரம் 2022 ஏப்ரல் 13 ஆம் திகதி முதல் மீளாய்வாண்டு இறுதி அளவில் சில கடன் தவணைகள் மற்றும் வட்டி கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டிருந்த போதும் அதற்குரிய கொடுப்பனவை மேற்கொண்டால் அப் பற்றாக்குறை மேலும் அதிகரிப்பதாக அவதானிக்கப்பட்டது. 2006 ஆண்டில் ரூபா 151 பில்லியனான வட்டி செலுத்துதல் 2023 ஆண்டளவில் அது ரூபா 2,455 பில்லியன் வரை 1,526 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. பாதீட்டு நிலுவையை நிதியீட்டம் செய்ய கடன் பெற்றுக் கொள்ள வேண்டியேற்பட்டிருந்ததுடன் அதற்கான வட்டி செலுத்தல் வருடாந்தம் அதிகரித்திருந்தது. 2023 ஆண்டின் போது பாதீட்டு செயலாற்றல் மற்றும் பற்றாக்குறை நிதியீட்டக் கூற்றின் பிரகாரம் திரட்டிய ரூபா 3,079 பில்லியனான அரசின் வருமானத்தில் ரூபா 2,455 பில்லியன் அதாவது 79.73 சதவீதமான வட்டி செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. இந் நிலைமை குறித்த காலப் பகுதியில் வருடாந்தம் அதிகரித்துள்ளதுடன், 2019 ஆண்டு முதல் அது துரிதமாக அதிகரித்துள்ளது.

(இ) வருமானம் திரட்டும் பிரதான நிறுவனமான உள்நாட்டு இறைவரி திணைக்களம். .இலங்கை சுங்கம், மதுவரி திணைக்களம் மற்றும் மோடார் வாகன திணைக்களத்திற்குரிய மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய நிலுவை வருமான மீதியின் கூட்டுத் தொகை ரூபா 1,127 பில்லியன் ஆகும்.

(ஈ) உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் 2023 ஆம் ஆண்டில் திரட்ட வேண்டியிருந்த ரூபா 1,066 பில்லியனான வருமானம், திரட்டாது நிலுவையாக காணப்பட்டது. அவ் வருமானம் 2023 ஆண்டில் திரட்ட முடியுமாக இருப்பின் அவ்வாண்டு வருமான பற்றாக்குயை ரூபா 584 பில்லியன் அதாவது 35.39 சதவீதம் வரை குறைத்துக் கொள்ள முடியுமாக இருந்தது. அந் நிலுவை வருமானம் 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் முறையே ரூபா 620 பில்லியன் மற்றும் ரூபா 904 பில்லியனாக இருந்தது. அவ்வாண்டுகளிலும் அந்த நிலுவை வருமானத்தை திரட்ட முடியுமாக இருந்திருந்தால் 2021 ஆண்டில் வருமான பற்றாக்குறை ரூபா 670 பில்லியன் வரை 51.94 சதவீதத்தாலும், 2022 ஆண்டில் வருமான பற்றாக்குறை ரூபா 636 பில்லியன் வரை 41.30 சதவீதத்தாலும் குறைத்துக் கொள்ளக்கூய இயலுமை காணப்பட்டது.

(உ) அதன் பிரகாரம், வரி நிர்வாக முகாமைத்துவ தகவல் தொகுதியின் நிலவும் குறைபாடுகள், வரி மேன் முறையீட்டு செயல்முறையின் நீண்டகாலத்தன்மை, நிலுவை வரி அறவிடல் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகளை அமுல்படுத்த வஷேடமான நீதி மன்ற தொகுதியொன்று நிறுவப்படாமை போன்ற காரணங்கள் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் நிலுவை வரி அறவிடலின் தாமதத்திற்கு தாக்கம் செலுத்தியிருந்தன.

(ஊ) சரியாக வருமான மதிப்பீட்டை தயாரித்திருக்காதமை அல்லது தயாரித்த வருமானம் மதிப்பீட்டின் பிரகாரம் வருமானம் திரட்டாமையும், சிக்கனமாக செலவினத்தை முகாமைத்துவம் செய்யாமையும் காரணமாக அரச கடன் பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. அக் கடன் பெற்றுக் கொள்ளல் வருடாந்தம் அதிகரித்திருந்ததால் கடன் வட்டி கிரயம் வருடாந்தம் அதிகரித்திருந்த காரணத்தால் மீண்டுவரும் செலவினம் அதிகரித்திருந்தது. மதிப்பிடப்பட்ட வருமானம் எதிர்பார்த்தவாறு திரட்டிக் கொள்ள முடியாமையும், மீண்டுவரும் செலவு அதிகரித்தமையும் காரணமாக வருடாந்த செலவினத்தை

தீர்த்துக் கொள்ள வருமானம் போதாமையால் வருமான பற்றாக்குறை வருடாந்தம் அதிகரித்திருந்தது.

## 4.3 வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரசின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 ஆண்டில் பாதீட்டு நிலுவை ரூபா 2,584 பில்லியனாக இருந்ததுடன் அது மொத்த தேசிய உற்பத்தியின் 9.35 சதவீதமாக இருந்தது. 2022 ஆண்டின் பாதீட்டு நிலுவை ரூபா 2,555 பில்லியனாக இருந்ததுடன், அது மொத்த தேசிய உற்பத்தியின் 10.62 சதவீதமாக இருந்தது. 2006 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை மொத்த கால வீச்சளவு பூராவும் பாதீட்டு நிலுவையொன்று நிலவியதுடன், அது 2006 ஆண்டில் நிலவிய ரூபா 300 பில்லினான பாதீட்டு நிலுவை 2023 ஆண்டளவில் ரூபா 2,584 பில்லியன் வரை அதிகரித்திருந்தது. அக்கால வீச்சளவில் உச்ச பாதீட்டு நிலுவை 2023 ஆண்டில் அறிக்கையிடப்பட்டிருந்தது. 2006 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை பாதீட்டு நிலுவை மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக கொள்கையில் அது 5.55 சதவீதம் முதல் 14.08 சதவீதம் வரையான வீச்சளவில் நிலவியது. உள்ளவாறான பாதீட்டு நிலுவை உள்ளவாறான மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக 2003 இன் இலக்கம் 3 கொண்ட நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 3(அ) பிரிவு பிரகாரம் நிலவ வேண்டியிருந்த 5 சதவீத எல்லை அக்காலப் பகுதியினுள் எந்தவொரு ஆண்டினும் பேணிக் கொண்டிருக்கவில்லை. 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் முறையே 5.55 சதவீதம், 5.69 சதவீதம் மற்றும் 5.59 சதவீதமான அளவில் பேணிக்கொள்ள முடியுமாக இருந்தது. | அரசாங்கத்தின் வருமானம் கவனத்திற்குரிய அளவில் உயர்வடைந்து சென்ற போதிலும் மீண்டெழும் செலவினத்தில் எதிர்பாராத நிலைமையின் காரணமாக பாதீட்டு நிலுவை தொடர்ந்தும் குறைத்துக் கொள்ளல் சவாலாக இருந்தது. | உரிய சட்ட ரீதியான ஏற்பாடுகளுக்கு இணங்கி பாதீட்டு நிலுவையைக் குறைத்தல் வேண்டும். |

## 4.4 கடன் மீதி அதிகரித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வருடாந்த வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறை அதிகரித்தலின் மத்தியில் கடன் பெற்றுக் கொள்ளும் அளவும் அதிகரித்திருந்தது. 2023 ஆண்டு இறுதியளவில் அரசினால் செலுத்த வேண்டிய கடன் மீதியாக ரூபா 29,150 பில்லியனாக அரச நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அம் மீதி தேசிய கடனாக ரூபா 17,074 பில்லியனும் வெளிநாட்டுக் கடனாக ரூபா 12,077 பில்லியனாகவும் காணப்பட்டது. 2022 ஆண்டில் அரச கடன் மீதி ரூபா 27,379 | 2022 ஆகஸ்ட் 12 ஆம் திகதி அரசாங்கத்தால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன் சேவைகளுக்குரிய கொள்கை ரீதியான தீர்மானத்தின் காரணமாக 2022 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடன் சந்தையில் நுழைவதற்கு காணப்பட்ட சந்தர்ப்பம் | குறித்துரைத்த ஏற்பாடுகளுக்கு இணங்க பொறுப்புக்களைப் பேணிச் செல்லல் வேண்டும். |

பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் 2022 ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆண்டில் கடன் மீதி ரூபா 1,771 பில்லியனினால் அதாவது 6 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2006 ஆண்டில் காணப்பட்ட ரூபா 2,431 பில்லியனான கடன் மீதி மொத்த தேசிய உற்பத்தியின் 82.72 சதவீதமாக இருந்ததுடன் அது 2023 ஆண்டிறுதியளவில் அது 104.06 சதவீதமாக இருந்தது. மேலும் 2013 இன் 15 இலக்க அரச நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 3(ஊ) பிரிவு பிரகாரம் அரச பொறுப்புக்கள் மொத்த தேசிய உற்பத்தியின் 80 சதவீதத்திலும் குறைவாக இருக்க வேண்டிய போதும் ஏனைய பொறுப்புக்கள் தவிர அரச கடன் பொறுப்பு மாத்திரம் அவ் எல்லையை விஞ்சி 104.06 சதவீதமாக இருந்தது. அந் நிலைமை 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளிலும் நிலவியது.

குறைவடைந்திருந்ததுடன் அந்த குறைவு உள்நாட்டுக் கடன் சந்தையில் கடன் பெற்றுக் கொள்வதன் மூலம் மேவுகை செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உள்நாட்டு கடன் மீதி ஒன்றின் அதிகரிப்பு 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டில் அதிகரித்துச் சென்றமையைக் குறிப்பிடுகின்றோம்.

வருமானத்தின் அடிப்படையிலான அரச நிதிகளை ஒன்றிணைப்பதன் மூலம் எதிர்வரும் ஆண்டுகளில் அரசாங்க கடன் பெறும் தேவையைக் குறைத்துக் கொள்வதன் மூலம் அரசாங்கத்தின் கடன் மட்டத்தை மேலும் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அவ்வாறே அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் வரைவின் மூலம் புதிய அரச நிதி விதிகளை அறிமுகப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 4.5 அரச கடன்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2023 ஆண்டு செயலாற்றல் திட்டத்திற்கு இணங்க அரசாங்கத்தின் மானியங்களை உள்ளடக்கி அரசாங்கத்தின் எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடு மற்றும் உள்ளவாறான பெறுமதி பின்வருமாறு. | | |

| அபிவிருத்தி தரப்பினர் | எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டு மானியத்தை உள்ளடக்கி 2023(ஐ.அ.டொலர். மில்லியன்) | உள்ளபடியான எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி மானியத்தை உள்ளடக்கி 2023 (ஐ.அ.டொலர் மில்லியன்) | முரண்கள் (ஐ.அ.டொலர் மில்லியன்) | முரண்கள் எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டின் சதவீதமாக (சதவீதம்) |
|---|---|---|---|---|
| --------- | -------- | --------- | ------- | -------- |
| உலக வங்கி | 806 | 753.2 | (52.8) | (7) |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 1,011 | 856.9 | (154.1) | (15) |
| சீனா மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கி (AIIB) | 21 | 24.2 | 3.2 | 15 |
| யப்பான் | 31 | 39.6 | 8.6 | 28 |
| கொரியா | 10 | 0 | (10) | (100) |
| மத்திய கிழக்கு ஆசிய நாடுகள் | 47 | 28.9 | (18.1) | (38) |
| தெற்கு ஆசிய நாடுகள் | 90 | 142.5 | 52.5 | 58 |
| ரஸ்யா, அவுஸ்திரேலியா மற்றும் மேற்கத்திய நாடுகள் | 30 | 32.2 | 2.2 | 7 |
| IFDA உள்ளடக்கி ஐக்கிய நாடுகள் முகவர் நிறுவனங்கள் | 15 | 9.7 | (5.3) | (35) |

| | | | | |
|---|---|---|---|---|
| சர்வதேச நிதிசார் நிதியங்கள் | 682 | 681.5 | (0.5) | 0.07 |
| மொத்தம் | ---------<br>**2,743**<br>===== | ----------<br>**2,568.7**<br>===== | ----------<br>**(174.3)**<br>===== | |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) 2023 ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டின் மொத்த பெறுமதி ஐ.அ.டொலர் 2,743 மில்லியனான போதும், உள்ளபடியான எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி ஐ.அ.டொலர் 2,568.7 மில்லியன் ஆனமையின் காரணமாக உள்ளவாறான எதிர்பார்க்கப்பட்ட பெறுமதியை விட ஐ.அ.டொ. 174.3 மில்லியனால் அதாவது, 6 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ii) தெற்கு ஆசிய நாடுகள், யப்பான், சீனா மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கி மற்றும் ரஸ்யா, அவுஸ்திரேலியா மற்றும் மேற்கத்திய நாடுகளில் இருந்து பெறப்பட்ட கடன்களின் உள்ளபடியான எதிர்பார்க்கப்பட்ட பெறுமதியை எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டுடன் ஒப்பீடு செய்த போது முறையே 58, 28, 15 மற்றும் 07 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(iii) உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, மத்திய கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் IFAD உள்ளடக்கி ஐக்கிய நாடுகள் முகவர் நிறுவனங்கள் என்பவற்றிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கடன் முறையே 7, 15, 38 மற்றும் 35 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(iv) மீளாய்வாண்டின் போது கொரியாவிலிருந்து கடன் பெற்றுக்கொள்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட போதும் ஆண்டின் இறுதி வரையிலும் கடன் பெறப்பட்டிருக்கவில்லை.

2022 ஏப்ரல் 12 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன் சேவையிடல் கொடுப்பனவு தொடர்பாக இடைக்கால கொள்கை தொடர்பான அறிவித்தலுடன் அநேகமான கடன் வழங்கும் நாடுகள் மற்றும் நிறுவனங்களினால் தற்போது அமுல்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டங்களுக்கான நிதி விநியோகித்தல் கைவிடப்பட்டிருந்ததுடன் தற்போது சர்வதேச நிதியத்தில் இலங்கைக்கு முன்மொழியப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இணங்கி கடன் மீள் கட்டமைப்பின் கலந்துரையாடல் அந்த கடன் வழங்குகின்ற நாடுகள் மற்றும் நிறுவனங்களுடன் நடாத்தப்படுகின்றது. அந்த கலந்துரையாடல்களின் செயல் முன்னேற்றத்தைக் கவனத்தில் கொண்டு 2023 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டின் சில ஏதாவது விநியோகித்தலின் அளவு மேற்கொள்ளப்படுகின்றதா என்ற எதிர்பார்ப்பில் 2023 ஆம் ஆண்டிற்காக கொரியா, ஜப்பான், சீனா இனை உள்ளடக்கிய முறையான பிரகாரம் திட்டங்களுடன் வெளிநாட்டு கடன் நிதியீட்டம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இருதரப்பு கடன் வழங்குகின்ற நாடுகளுக்காக விநியோகித்தல் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் அந்த கலந்துரையாடலில் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் முடிவடையாமையின் காரணமாக மத்திய கிழக்கு மற்றும் கொரியா போன்ற நாடுகளில் மதிப்பீடு செய்யப்பட்ட விநியோகதித்தலை விட உள்ளபடியான விநியோகித்தல் குறைவடைந்திருந்தது.

ஜப்பானின் மூலம் நிதியீட்டம் செய்யப்படுகின்ற செயற்திட்டமும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கடன் மீள் கட்டமைப்பு கலந்துரையாடல்களில் இறுதி இணக்கப்பாட்டிற்கு வர முடியாமல் இருந்தமையால் கடன் விநியோகித்தல் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் ஜப்பானால் இலங்கைக்கு மானியப் பணம் எதிர்பார்க்கப்பட்ட அளவினை விட அதிக அளவில் வழங்கப்பட்டமையால் அதன் உள்ளபடியான விநியோகித்தலில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமையுடன் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம்

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ளப்பட்ட விநியோகித்தல் மதிப்பீட்டுப் பெறுமதியின் உள்ளபடியான விநியோகித்தல் சிறு அளவில் மாற்றமடைவதற்குக் காரணமாக இருந்தது. | |

**4.6 இலாபம் மற்றும் இலாபப்பங்கு**

பின்வரும் அவதாப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2023 திசெம்பர் 31 திகதி அரச நிதிக்கூற்றுக்களில் அரசிற்கு சொந்தமான முயற்சிகளில் மூலதன பங்களிப்பு ரூபா 2,407,633 மில்லியன் ஆன போதும், அம் முதலீடுகளிற்காக மீளாய்வாண்டில் ரூபா 75,700 மில்லியன் இலாபம் மற்றும் இலாபப்பங்கு மாத்திரம் கிடைத்திருந்தது. அது மேற்கொண்ட முதலீட்டு பெறுமதியின் 3.4 சதவீதம் ஆகும். | பொதுத் திறைசேரியில் காணப்படுகின்ற வரையறையான நிதி நிலைமையின் அடிப்படையில் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளில் முதலீடுகளை மேற்கொள்ளும் இயளவு மிகவும் கீழ் மட்டத்தில் காணப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டின் போதும் மூலதன பங்களிப்பு அரச பொது முயற்சிகளில் மிகவும் சிறு அளவிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதனிடையே அரசாங்கத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்குத் தேவையான இலங்கை மின்சார சபை , ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் போன்ற பொது முயற்சிகளின் ஐந்தொகை மீள்கட்டமைத்தல் மற்றும் பொது முயற்சிகளினால் | பொது முயற்சிகளில் மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்துதல் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முகங்கொடுத்திருந்த திரவத் தன்மை மற்றும் தொழிற்படு மூலதன தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்காகக் கொண்டிருந்தது. அவ்வாறான சிக்கலான நிலைமையில் அந்த முதலீட்டின் அடிப்படையில் இந்த ஆண்டின் போதும் நலன்களை உழைக்கும் இயலுமை அந்த நிறுவனத்திடம் காணப்பாதிருந்தமையை குறிப்பிடுகின்றோம். | |
| (ii) | 2023 திசெம்பர் 31 திகதி பொது முயற்சிகள் தணைக்களத்தின் மேற்பார்வைக்கு உட்படும் அரசிற்கு சொந்தமான முயற்ச்சிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் எண்ணிக்கை 305 ஆன போதும், அவற்றில் 55 நிறுவனங்களிற்காக மாத்திரம் வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 47 நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் இலாப மற்றும் இலாபப் பங்கு திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்தது. | வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது பொது முயற்சிகளுக்கு இலாபப் பங்கு செலுத்தும் இயலுமை காணப்பட்டதா என ஆரம்பமாக மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்த துடன் அந்த இயலுமை காணப்படுகின்ற நிறுவனங்களுக்காக மாத்திரம் வருமான மதிப்பீடு தயாரிக்கம் போது கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது. | மேற்படி |

## 4.7 திறைசேரி பிணைகள் மற்றும் நிவாரணக் கடிதம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டிலும், அதற்கு முன்னைய ஆண்டிலும் காலாவதியாகியதன் அடிப்படையில் ரூபா 168,541.48 மில்லியன் மற்றும் அ.டொலர் 59.88 மில்லியன் பெறுமதி உடைய 17 திறைசேரி பிணைமுறிகளுகக்கும் மற்றும் ரூபா 29,250 மில்லியன் மற்றும் அ.டொலர் 200 | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம். | திறைசேரி பிணைமுறி மற்றும் நிவாரண கடன் கடிதம் விநியோகித்து செயற்பாடுகளை முறையாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் பெறுமதியுடைய 09 சலுகை கடிதங்களுக்கும் உரியதாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மீண்டும் செல்லுபடி காலம் நீடிக்கப்பட்டிருந்தது. | | நாளது வரையாகவும் பேணிச் செல்லல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வெளிநிறுவனங்களுக்கு 10 சந்தர்ப்பங்களின் போது விநியோகிக்கப்பட்ட ரூபா 115,977.35 மில்லியன் பெறுமதியான பிணைமுறி 10 சந்தர்ப்பங்களின் போது விநியோகிக்கப்பட்ட ரூபா 28,838.4 மில்லியன் பெறுமதியான சலுகைக் கடிதம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் காலாவதியாகியிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அவற்றின் செல்லுபடி காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய திறைசேரிப் பிணைமுறி மற்றும் நிவாரண கடிதங்களுக்குரிய செல்லுபடிக் காலம் கணக்காய்வுத் திகதி வரையிலும் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக தற்போதைய நிலைமை பின்வருமாறு.<br><br>• இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்<br><br>நிலுவை தீர்த்து வைத்தல் துரிதப்படுத்தி செயல் முன்னேற்றத்தை அறிகையிடுமாறு கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>• இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தபனம்<br><br>2024.01.05 ஆம் திகதி செல்லுபடிக் காலம் 2023.10.16 முதல் 2028.12.31 வரை நீடிக்கப்பட்டுள்ளது.<br><br>• தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை<br><br>இரு தரப்பினரும் வெளிவாரி கடன்களுக்காக சேவை வழங்குதல் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளமைக் கு மேற்கொள்ளப்பட்ட | மேற்படி |

அரசாங்கத்தின் அறிவித்தலின் பிரகாரம் கடன் சேவை செலுத்துதல் கைவிடப்பட்டிருந்ததுடன் 2022 ஏப்ரல் முதல் எந்த ஒரு கொடுப்பனவும் மேற்கொள்ளப்படாதிருந்தமையும் இது தொடர்பான நிலைமையை எதிர்காலத்தில் அறிவிப்பதாகவும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

- வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் கம்பனி

  2024.01.18 ஆந் திகதி இந்த இரண்டு பிணை முறிகளினதும் செல்லுபடிக் காலம் 2023.11.11 முதல் 2024.11.11 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

- இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

  2024.02.12 ஆந் திகதி ஒரு வருட காலத்திற்காக நீடிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்

  அபிவிருத்தி நிதி திணைக்களம் 2023.02.24 ஆந் திகதிய கடிதத்தில் வணிக வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு இது

தொடர்பாக அறிவிக்கப்பட்ட போதும் இதுவரையும் பதில் கிடைத்திருக்கவில்லை

- மிஹின் லங்கா கம்பனி

  2024.03.28 ஆந் திகதி இந்த பிணை முறியின் செல்லுபடிக் காலம் 2024.12.31 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

- வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் எயாலைன்ஸ் கம்பனி

  இந்த நிவாரண கடிதங்களின் செல்லுபடிக் காலம் 2023.12.31 முதல் 2024.12.31 வரை 2024.01.18 ஆம் திகதி நீடிக்கப்பட்டிருந்தது.